Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 22 | 05-06-2003 | வியாழக்கிழமை | ஓசை 107

உங்களுக்கு உதவுவோம் வாருங்கள்
அச்சகங் அலுவலகங் மாணவர் களுக்கு
சாணக்கியா
அச்சுப் பொருட்கள்
காகிதாதிகள் வாணிபம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## பிரதமரின் பரிந்துரை, விளக்கம் புலிகளால் நிராகரிப்பு

# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கான வரைபை முன்வைத்தால் பேச்சை ஆரம்பிக்கலாம்!

## பாலசிங்கம் ரணிலுக்குப் பதில் கடிதம்

(லண்டன்)

**உங்களது பரிந்துரைகள் எங்களுக்குத் திருப்தி அளிக்காமையினால் அதை நாங்கள் ஏற்க முடியாது. எங்களது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்து எங்களது தலைமையின் பரிந்துரைக்கு ஏற்ப இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான வரைபை எங்களது பரிசீலனைக்கு வைத்தால் நாங்கள் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தயாராக இருக்கின்றோம். இவ்வாறு புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் கடிதத்திற்கு நேற்று அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**



உங்கள் கடிதத்தை மிகவும் அவதானமாக அராய்ந்தபின் விடுதலைப் புலிகளின் தலைமை எழுப்பியிருந்த பிரச்சினை குறித்து நீங்கள் உங்கள் கடிதத்தில் எதனையும் தெரிவிக்க தவறியிருக்கின்றீர்கள் என்று விடுதலைப்புலிகள் கருதுகின்றனர். அதற்குப்பதிலாக அபிவிருத்திக் கட்டமைப்புத் தொடர்பான உங்களது பரிந்துரைகளின் சில அம்சங்களுக்கு நீங்கள் விளக்கம் கொடுக்க முயற்சித்துள்ளதோடு அது தொடர்பாக விவாதிக்க, விளக்கமளிக்க விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கின்றீர்கள்.

முதன்முதலாக விடுதலைப் புலிகளின் தலைமை முன்வைத்துள்ள பரிந்துரை தொடர்பாக கண்ணோட்டமும், உங்களது அரசு அளிக்க முன்வந்துள்ள அபிவிருத்திக் கட்டமைப்புத் தொடர்பான கண்ணோட்டமும் வெவ்வேறானவை

(08ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு மணிநேரம் நீடித்த சந்திப்பு!

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை ஐரோப்பிய நாட்டுத் தூதுவர்கள் சந்தித்து தற்போதைய சமாதான நிலை தொடர்பாக பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை 11.15 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இரண்டு மணித்தியாலயங்கள் நடைபெற்ற இச்சந்திப்பில் மூன்று ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தூதுவர்கள் கலந்து

(08ஆம் பக்கம் பார்க்க)

## டோக்கியோ மாநாட்டிற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன!

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கலந்துகொள்ளும் டோக்கியோ மாநாட்டுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக சிறிலங்காவின் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜீஎல். பீரிஸ் கூறியுள்ளார்.

வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கும் அரசாங்கத் தூதுக்குழு அடுத்த சில தினங்களில் ஜப்பானுக்குப் புறப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த குழுவிற்கு தலைமை தாங்கு

(08ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக சபைக்கு நிபந்தனை விதிக்கும் சனாதிபதி!

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை உருவாக்கப்பட வேண்டுமானால், சில நிபந்தனைகளைப் புலிகள் நிறைவு செய்ய வேண்டும் எனச் சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக சபைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மகஜர் கையளிக்க வந்த பௌத்த குருமார் முன்னணியில் பேசிய அவர்,

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கான இடைக்கால நிர்வாகத்தையோ, நிர்வாக சபையையோ பெற்றுக் கொடுப்பதற்கு தாம் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை.

ஆனால், இடைக்கால நிர்வாக கட்டமைப்பைப் பெற வேண்டுமானால் விடுதலைப்புலிகள் சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென சனாதிபதி வலியுறுத்தியுள்ளார். விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு ஈழக் கோரிக்கையை கைவிட்டால் மாத்திரமே இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த முடியும். அந்தச் சபையிலும் விடுதலைப்புலிகள் மாத்திரமல்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் துறைப் பொறுப்பாளர் அமைச்சர் சந்திரசேகரன் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்காவின் அமைசர் சந்திரசேகரன் தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

நேற்று மாலை 6.30 மணியளவில் நடைபெற்ற இச்சந்திப்பின் அமைச்சர் சந்திரசேகரன் [illegible] தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்களும் கலந்

(08ஆம் பக்கம் பார்க்க)

# டோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்து கொள்வதற்கான சூழ்நிலை உருவாக்க வேண்டியது அரசின் பொறுப்பு

## ஐரோப்பியத் தூதுவர்களிடம் தமிழ்செல்வன் வலியுறுத்து

"விடுதலைப்புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. இதற்கான அழுத்தத்தினை சர்வதேச சமூகம் சரியான முறையில் அரசாங்கத்தின் மீது கொடுக்க வேண்டும்." என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று தம்மைச் சந்தித்த நெதர்லாந்து, சுவிஸ்லாந்து, பிரிட்டன் தூதுவர்களுடனான சந்திப்பின் போது வலியுறுத்திக் கூறினார்.

நேரறைய சந்திப்புக் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்ச்செல்வன் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்: ஜப்பான் மாநாட்டில் புலிகள் நிச்சயமாக கலந்து கொள்ளவேண்டும் என்கின்ற சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகள் அமைந்தமையாலேயே இன்று எம்மை சந்தித்த தூதுவர்கள் எம்மிடம் பல கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள்.

அவர்களின் கருத்துக்கு நாம் எமது தரப்பு நியாயப்பாடுகளையும், எமது நிலைப்பாடுகளையும் தெளிவு படுத்தியுள்ளோம். இது நல்லதொரு சமிக்கை ஆக இருக்கும் என்றே நாம் எதிர்பார்கின்றோம். ஏனெனில் ஜப்பான் மாநாட்டிற்கு நாங்கள் போக வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் விருப்பங்களையும், எதிர்பார்ப்புக்களையும் நாங்கள் புரிந்து கொள்ளுகின்ற அதேவேளை, நாங்கள் எமக்கான கௌரவம் இல்லாமலும் சம அந்தஸ்து இல்லாமலும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வது எந்தவகையிலும் நியாயமற்றது என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம். அரச தரப்பினுடைய கூடுதலான வேண்டுகோள்களையே அவர்கள் கேவிபடுத்து வந்துள்ளனர்.

ஆனால் எமது தரப்பு நியாயப்பாடுகளை நாம் இன்று தான் அவர்களுக்கு வழங்கக்கூடியதாக இருந்தது. அதில் நாம் அவர்களுக்கு மிகத் தெளிவாகக் கூறியுள்

(02ஆம் பக்கம் பார்க்க)



அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை நேற்றுச் சந்தித்த ஐரோப்பிய நாட்டுத்தூதுவர்கள்.

## (01ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளோம். ஜப்பான் மாநாட்டிற்க்கு கலந்து கொள்ள வேண்டுமாக இருந்தால் ஜப்பானில் கிடைக்கப்போகின்ற உதவிகள் பெருமளவு நிதிகளை பயன்படுத்தக்கூடிய ஒரு நிர்வாகக் கட்டமைப்பை வடக்கு-கிழக்கில் முதலில் கட்டிஎழுப்பப்பட வேண்டும் எனவும், அதில் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக இருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைத் துவத்தின் கீழ் ஒரு இடைக்கால நிர்வாகக் அமைப்பு ஒன்றை ஒழுங்கு படுத்துவதன் அவசியத்தையும் குறிப்பிட்டிருகின்றோம்.

கடந்த காலங்களில் சிரான் அமைப்பு சரியாக செயற்படாது செயற்திறன் அற்ற ஒரு அமைப்பாக இருந்தது. அதன் தோல்விகள் பின்னடைவுகள் தொடர்பாக நீண்ட நேரமாக அவர்களுக்கு விளக்கி உள்ளோம்.

அதன் அடிப்படையில் இங்கு ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் தேவையை அவர்களும் உணர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் இதை அரச தரப்புக்கு எடுத்துச் சொல்வதாகவும் கூறியிருக்கிறார்கள். இது எமக்கு மகிழ்வைத் தருகிறது.

ஜப்பான் மாநாட்டுக்கு செல்வதற்கு முன்னர் எங்களது தலைவர் ஏற்கனவே நோர்வே வெளியுறவு அமைச்சருடன் பேசிக் கொண்டதற்கு அமைவாக ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்குகின்ற உத்தரவாதம் ஒன்றை நாம் அரச தரப்பில் இருந்து எதிர்பார் த்துக் கொண்டிருக்கிறோம். அப்படியான உத்தரவாதங்களும் உறுதிமொழிகளும் கிடைக்குமாக இருந்தால் நாங்கள் எங்களது முடிவுகளை பரிசீலிப்போம் என்பதை நாம் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

**கேள்வி:** விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளை ஒத்திவைத்துள்ள இந்தவேளையில் ஐரோப்பிய நாட்டுத்தூதுவர்களின் பயணம் எந்தவகையில் முக்கியத்துவம் பெறுகிறது?

இந்த ஐரோப்பிய நாட்டுத் தூதவர்களினது இப் பயணம் குறிப்பாக மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஜப்பானில் நடைபெற இருக்கும் உதவி வழங்கும் மாநாட்டில் புலிகளைப் பங்கு பற்ற கேட்பதுமாகவே அமைந்தது.

அதற்கு இன்றைய சந்தர்ப்பத்தில் நாங்கள் எங்களுடைய நியாயமான நிலைப்பாடுகளையும், எமக்கு இருக்கின்ற இக்கட்டான சூழ்நிலைகளையும் அவர்களுக்கு விளக்கி இருக்கிறோம். ஜப்பான் மாநாட்டுக்கு புலிகளை கூட்டிச் செல்வது அரசின் கரங்களிலே தான் உள்ளது.

இலங்கை அரசு தீர்க்கமான முடிவுக்ளை எடுத்து அதில் புலிகளும் கலந்து கொள்வதற்கான ஆக்க பூர்வமான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தைகளை மீள தொடங்குவதற்கோ அல்லது டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதற்கோ விடுதலைப் புலிகள் எந்தக்கட்டத்திலுமே மறுப்புத் தெரிவிக்கவில்லை. அதற்கான சூழ்நிலையையே வேண்டி நிற்கின்றார்கள். அந்த சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வது அரசின் பொறுப்பு. ஆகவே இந்த அரசு அதற்கான சாதகமான தீர்க்கமான முடிவுகளை முன்னெடுக்குமாக இருந்தால், அந்தச் சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை புலிகளின் தலைமையினுடைய விருப்பமும் ஆர்வமும் தமிழ் மக்களினுடைய பிரதிநிதிகளாக கௌரவமாக சம அந்தஸ்தோடும், அங்கீகாரத்தோடும் நாங்கள் அதில் கலந்து கொள்வதுதான் தமிழ் மக்களின் விருபபமாகவும் உள்ளது.

ஆகவே இதற்கு இலங்கை அரசுதான் முடிவுகள் எடுக்கவேண்டும். அந்த முடிவுகளை எடுப்பதற்கான அழுத்தம் சரியாக பிரயோகிக்கப்பட வேண்டும். சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு வலியுறுத்தல்கள் என்பவவை சரியான முறையில் இலங்கை அரசுக்கு கொடுக்கப்படும் பொழுதுதான் அரசாங்கம் அதற்கான ஒழுங்குகளை செய்து தரும்.

ஆகவே, இன்றைய சந்திப்பின்போது சர்வதேச சமூகம் புலிகளை மட்டும் வேண்டிக் கொள்வது நியாயமற்றது.

அதேவேளை அரசாங்கம் அந்த சூழ்நிலையை தோற்றுவிக்க வேண்டும். கடந்த பதினான்கு மாதங்களாக முன்னெடுக்கப்பட்ட அமைதி நடவடிக்கை முயற்சிகள் குறிப்பாக ஆறு சுற்றுப் பேச்சுக்களிலும் எட்டப்பட்ட இணக்கபாடுகள் எதுவுமே நடைமுறைப் படுத்தப்படாததினால் மக்கள் நம்பிக்கை இழந்து விரக்தியுற்ற நிலையில் உள்ளனர். இவ்வாறான நிலமைகளை அரசாங்கம் மாற்றி அமைக்க வேண்டும். இதற்கான ஒருகால அவகாசத்தை வழங்கும் நோக்கில் தான் நாம் இந்தப் பேச்சுக்களை இடை நிறுத்தியதும் ஜப்பான் மாநாட்டில் கலந்து கொள்வதற்கான சில உறுதி மொழிகளையும் செயற்பாடுகளையும் அரசிடம் வேண்டி நிற்பதும் ஆகும்.

இதற்கு 'அரச தரப்பு சாதகமான முடிவுகளை எட்டி விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் மதிப்பளித்து சம அந்தஸ்துடன் விடுதலைப்புலிகளைப் பங்குபற்ற வைக்க வேண்டிய பொறுப்பு அரசிடமே உள்ளது.

ஆகவே அரசாங்கத்திற்கு இந்த மாநாட்டில் புலிகள் பங்கு பற்ற வேண்டும் என்ற அக்கறை இருக்குமாக இருந்தால், ஆக்கபூர்வ மானதும், யதார்த்தபூர்வமானதும் எமது மக்களின் நலன்களைப் பேணக் கூடியதுமான முடிவுகளை எடுக்க வேண்டும். என்பதை அவர்களுக்கு நாங்கள் மிகவும் தெளிவாக வலியுறுத்தியுள்ளோம்.

கேள்வி: இவ்விடயங்கள் தொடர்பாக அரச பிரதிநிதிகளிடம் பேசுவீர்களா? அரச பிரதிநிதிகளைச் சந்திப்பது என்றால் என்ன விடயங்களை கதைப்பது என்பது தொடர்பாக முதலில் முடிவுகளை எட்ட வேண்டும். அனுசரணையாளர்கள் ஊடாக ஒரு இடைக்கால நிர்வாகம் அமைப்பது என்ற உறுதிப் பாட்டையும், அதன் தெளிவான நிலைப் பாட்டையும் அரசாங்கம் முன்வைக்கும் பட்சத்தில்தான் அனுசரணையாளர்களின் ஒழுங்கமைப்பின் கீழ் பேச்சுக்களை முன்னெடுக்கின்ற சூழ்நிலை உருவாகும்.

புலிகள் பேச்சுக்களை இடைநிறுத்தியுள்ள போதும் யாழ். குடா நாட்டில் படைகள் இராணுவ முகாங்களை அமைத்து வருகிறது? எனக்கேட்ட போது, யுத்த நிறுத்த உடன் படிக்கையில் இயல்பு நிலையைக் கொண்டு வருதல் என்பது இராணுவம் ஒரு கால வரையறையுடன் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இருந்தும் பொது இடங்களில் இருந்தும் படிப்படியாக விலகி மக்களின் வாழ்வு நிலையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாகவும் நாம் இன்றைய சந்திப்பில் அவர்களுக்குத் தெளிவு படுத்தி உள்ளோம்.

இயல்பு நிலையை உருவாக்குவதற்கான காலம் கடந்துவிட்டது. இயல்பு நிலையை ஏற்படுத்த அரசோ அல்லது படைகளோ எந்த விதத்திலும் ஒத்துழைக்கவில்லை என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். சர்வதேச சமூகம் புரிந்து கொண்டுள்ளது. ஆகவே சர்வதேச சமூகத்திற்கு நாங்கள் இன்றைக்குத் தெளிவுபடுத்தியது எங்களுக்கு ஜப்பானுடனோ, அமெரிக்காவுடனோ, ஐரோப்பிய வேறு சர்வதேச நாடுகளுடனோ எங்களுக்கு எந்த வித கருத்து வேறுபாடுகளும் இல்லை.

அவர்களது நியாயமான எதிர்பார்ப்புகள் இலங்கைத் தீவில் அமைதி நிலவ வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தெளிவான முறையில் உதவிகள் வந்து ,கிடைக்க வேண்டும் என்பதே.

இந்நிலைப்பாட்டை பாராட்டி உள்ளோம்.

அதேவேளை, விடுதலைப்புலிகள் பங்குபற்ற வேண்டும் என்ற அவர்களின் விருப்பத்துக்கும் நாம் மதிப்பளிக்கின்றோம். அதேவேளை நாம் பங்கு பற்றுவதற்கு முடியாத இக்கட்டான சூழ்நிலையை அரசாங்கம் தான் தோற்றுவித்துள்ளது. நாம் பங்கு பற்றுவதற்கான சாதகமான சூழ்நிலையை அரசாங்கம் தான் உருவாக்க வேண்டும் என்பதை அவர்களுக்கு நாம் விளக்கபடுத்தியுள்ளோம். அதனை அவர்களும் விளங்கி உள்ளார்கள். அது எமக்கு உற்சாகத்தையும் தந்துள்ளது.

ஜப்பான் மாநாட்டில் புலிகள் பங்கு பற்றாவிட்டால் சர்வதேச சமூகம் வடக்கு கிழக்கு மக்களுக்கு அளிக்கின்ற நிதியை சரியான முறையில் பயன்படுத்துகின்ற உத்தரவாதம் இல்லாமல் போகும் என்பதை அவர்கள் விளங்கிக்கொள்கின்றார்கள்.

அதில் நாங்களும் எங்களுக்கொரு உத்தரவாதமில்லாத, தமிழ் மக்களுக்கு அந்த உதவிகளை கொண்டுவந்து வழங்குகின்ற எந்த உறுதிப்பாடும் உத்தரவாதமும் மிக்க நிர்வாக கட்டமைப்பை உருவாக்கிக், கொள்ளது நாம் அதில் கலந்து கொள்ளவது ஒரு பொம்மை போலவே அமையும்.

நாங்கள் ஒரு தலையாட்டி போல இலங்கை அரசுடன் சேர்ந்து தலையாட்டிவிட்டு வரமுடியாது. நாங்கள் எந்த அந்தஸ்தும், கௌரவமும் இல்லாது இலங்கை அரசுக்கு பணம் சேகரித்துக் கொடுத்துவிட்டு வருகின்ற பணியை நாம் செய்ய முடியாது.

நாங்கள் அதில் சென்று அதிகார பூர்வமாக இருந்து எமது மக்களின் தேவைகளை முன் வைக்க வேண்டுமாக இருந்தால் அதற்கான அந்தஸ்தும் கொளரவமும் எமக்குத் தரப்பட வேண்டும். இதை சர்வதேச சமூகம் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளது.

ஆகவே ஜப்பான் மாநாட்டில் இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் சரியான நிலைப்பாடுகளைத் தெளிவாக்கி அதன் மீது அழுத்தத்தைக் கொடுத்தது. அராசங்கத்தை சரியான வழிக்குக் கொண்டு வந்து சமாதானத்தை முன்நகர்த்திச் செல்வதற்குச் சர்வதேச சமூகத்திற்கும் ஒரு கடப்பாடு உள்ளது. நாங்கள் இதனை அவர்களிடம் வலியுறுத்தியுள்ளோம். அவர்கள் மாற்று நிலைப்பாட்டுடன் வந்தாலும் எங்களுடைய கருத்துக்களைம் நிலைப்பாடுகளையும், அக்கறையோடு, கரிசனையோடு கேட்டார்கள். அத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தாம் இவற்றை தெரிவிப்பதாகவும் எமக்கு உறுதி அளித்தார்கள்.

கேள்வி: இந்த மூன்று தூதுவர்களும் இடைக் கால நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டார்களா?

நிச்சயமாக அதாவது வடக்கு- கிழக்கிலே ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்பதில் சர்வதேச சமூகத்தின் அக்கறையை அவர்களது நிலைப்பாட்டின் ஊடாக நாம் புரிந்து கொண்டுள்ளோம்.

இது ஒரு நியாயமான கோரிக்கை ஏனெனில் இது புதிதாக வைக்கப்பட்ட கோரிக்கையல்ல. இலங்கை அரசாங்கமும் இன்று இருக்கின்ற பிரதம மந்திரியாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தான் இது. அது இன்றைய காலத்தின் தேவையாக தற் போது உள்ளது.

ஏனெனில் மிக அவசரமாக எங்களது மக்களின் வாழ்க்கை நிலையை இயல்பு நிலைக்குக் கொண்டுவர வேண்டும் அதற்கு மனிதாபிமான அபிவிருத்தி புனர்வாழ்வுப் பணிகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டுமானால் அதற்கு ஒரு இடைக்கால நிர்வாக கட்டமைப்புத் தேவை. நாம் அந்த யதார்த்தத்தை விளங்கப்படுத்தி உள்ளோம். அவர்களும் இந்தக் கருத்துக்களை மிகவும் செவிமடுத்தார்கள்.

கேள்வி: இந்த இடைக்கால நிர்வாகத்தில் ஒரு அரசியல் அதிகாரம் தேவைதானா?

இதைப்பற்றி நாங்கள் பேசி முடிவெடுக்க நீண்டகாலம் செல்லலாம். அதுவரை நாம் எமது மக்களுடைய புனர்வாழ்வு பின் தள்ளப் படுவதை அனுமதிக்கமுடியாது. இது அவசர மனிதாபிமான தேவை. இதை நாங்கள் நடைமுறைப்படுத்த ஒரு இடைக்கால நிர்வாக அதிகார முறை அமைப்பை உருவாக்க வேண்டும். நாம் அதை வலியுறுத்தியுள்ளோம். (லோ)

## குடாநாட்டில் சுமார் 25,000 குடும்பங்கள் மீளக்குடியேறா நிலையில் உள்ளனர்

அரசு-புலிகள் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களில் அநேகமானவற்றை சிறிலங்கா அரசு அமுல்படுத்த தவறியுள்ளது. அகதிமுகாங்களிலும், நலன்புரி நிலையங்களிலும் வாழும் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த மக்களின் நியாயமான எதிர்பார்க்கைகளையும், உடனடித் தேவைகளையும் அரசு பூர்த்தி செய்யாததையிட்டு கவலை கொண்டுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி பாடசாலைகளிலும், ஆலயங்களிலும், வீடுகளிலும் முகாமிட்டுள்ள படையினர் வெளி யேற்றப்பட்டு இயல்புவாழ்க்கை தோற்றுவிக்க வேண்டும். எவ்வாறாயினும் யாழ். மாவட்டத்தில் 144.15 சதுர கி.மீ பரப்பு பிரதேசங்களில் இராணுவம் இன்னும் நிலைகொண்டிருக்கின்றது.

இப்பகுதிகளில் முன்பு 30,388 குடும்பங்கள் வாழ்தனர். இவர்களில் 24,178 குடும்பங்கள் இன்னும் அப்பகுதிகளுக்கு சென்று குடியேற முடியாதுள்ளது. 67 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இப்பகுதியில் 47 பாடசலைகளும் 246 வழிபாட்டுத் தலங்களும் உள்ளடங்கும். மேலும் 81.5 சதுர கி.மீ பரப்பளவு கொண்ட கடற்றொழில் வலயமும் 12,259 ஏக்கர் விவசாயக் காணிகளும் இன்னும் படையினர் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. ஆகவே புரிந்துணர்வு உடன்பாட்டில் தெரிவிக்கப் பட்டிருப்பது போல 40 ஆயிரம் துருப்புக்கள் முகாமிட்டிருக்கும் மேற்படி பகுதிகளை விட்டுத்தந்து மக்களின் பெறுமதிமிக்க வீடுகள், காணிகள் என்பவற்றை ஒப்படைத்து இயல்பு வாழ்கையை ஏற்படுத்தித்தர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

## பதவிக்காலம் நீடிப்பு



கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரியான டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தியின் பதவிக் காலம் 3 வருடங்களுக்கு மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார் 2006.04.27ஆம் திகதிவரை இவரது பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிரேஷ்ட திடீர் மரண விசாரணை அதிகாரியான டாக்டர் திருலோகமூர்த்தியின் சேவையை கௌரவிக்கும் முகமாக அகில இலங்கையிலும் கடமையாற்றும் வகையில் இலங்கைத் தீவு முழுவதற்குமான சமாதான நீதவானாகவும் நீதி அமைச்சு இவரை நியமனம் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## நகை திருட்டுத் தொடர்பாக ஒருவர் கைதாகினார்

செட்டிகுளம் பாவற்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் களவு போன 15 பவுண் நகைகள் பிடிக்கப் பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாவற்குளம் பகுதியில் உள்ள வீட்டில் இருந்து இரவு வேளையில் களவாடப்பட்ட 15 பவுண் நகையுடன் பாவற்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரை அவரது மகள் கொடுத்த தகவலின் படி செட்டிக்குளம் பொலிசார் கைது செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


### கணினி - தொழிற்றிறன் பயிற்சி நெறிகள் ஆரம்பம் 10.06.2003

யூனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளி / வலயக்கல்வி அலுவலகத்தின் முறைசாராக்கல்விப் பிரிவினால் நடாத்தப்படும் கணினிப்பயிற்சி - தொழிற்றிறன் பயிற்சி நெறிகள் 10.06.2003 செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பிக்கப்படுகின்றது. 04,05.05.2003 திகதிகளில் நேர்முகத்தேர்விற்குத் தோற்றியவர்கள் பயிற்சிக்கு சமுகமளிக்கவும்.

(சி - 9138)

### முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 09.06.2003 அன்று இடம்பெறவுள்ள வற்றாப்பளை கண்ணகையம்மன் வருடாந்த பொங்கல் விழாவை முன்னிட்டு புதுக்குடியிருப்பு வணிகர் கழக எல்லைக்குட்பட்ட சகல வணிக நிறுவனங்களும் 07.06.2003 சனிக்கிழமையும் 08.06.2003 ஞாயிற்றுக்கிழமையும் திறந்திருக்கும் என்பதனை பொது மக்களுக்கும், வணிகர்களுக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

தலைவர்,
வணிகர் கழகம் புதுக்குடியிருப்பு

(சி-7751)

### காணவில்லை

முனியாண்டி ராஜகுமார் (குமார்) வயது 27 கரடியனாறு மட்டு என்பவர் 14 ஆண்டுகளாக காணவில்லை. இவர் பற்றிய விபரம் தெரிந்தவர்கள் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

கிரி கடை கணேச வித்தியாலயம் முன்பாக கைவேலி புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

தகவல்:
எம். முனியாண்டி (தந்தை)

(3227)

# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளதாகக் கூறி

# ஜோர்ஜ் புஷ், பிளேயர் மக்களைத் தவறாக வழி நடத்தினர்

## பிரி. பாராளுமன்றம், அமெ. செனற்றில் விசாரணை

**ஈராக்கில் பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்ட சதாம் ஹுசைன் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்தார் என்ற சந்தேகம் தொடர்பாக பிரிட்டிஷ் பிரதமமந்திரி ரொனி பிளேயர், பாராளுமன்றத்தையும் பொது மக்களையும் தவறான வழியில் இட்டுச் சென்றுள்ளார் என்ற குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளதனால் ஈராக் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்ற பிளேயரின் நோக்கங்கள் குறித்து பிளேயர் மீது விசாரணை நடத்துவது என பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். இதேவேளை அமெரிக்க செனற் சபையிலும் ஜோர்ஜ் புஷ் மீது விசாரணை நடைபெறவுள்ளது.**

குறிப்பாக சதாம் ஹுசைன் பேரழிவு தரும் ஆயுதங்களை வைத்திருந்தார் என்ற விவகாரம் குறித்தே ஈராக் மீது யுத்தம் நடத்துவது என்று எடுத்துக் கொண்ட தீர்மானம் தொடர்பாக விசாரணையை நடத்துவது என பாராளுமன்ற வெளிவிவகாரக் குழு தெரிவித்துள்ளது.

பிரதம மந்திரி பிளேயரும், அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சும் ஈராக்கிய தலைவர் சதாம் ஹுசைனின் ஆயுதங்கள் பாரதூரமான அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளன என்ற குற்றச்சாட்டின் பேரில் அவரைப் பதவியில் இருந்து கவிழ்த்தார்கள்.

ஆனால், ஈராக்கில் எந்தவித இரசாயன உயிரியல், அணு ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை.

எனவே ஈராக் மீது யுத்தம் தொடுப்பதை நியாயப்படுத்துவதற்காக பிளேயரும், புஷ்சும் உளவு அறிக்கைகளைத் தங்கள் சொந்த நலனுக்காக திரித்துக் கூறி உள்ளார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளிவிவகாரக் குழுவின் தீர்மானம் குறித்து ஆத்திரமடைந்த பிரதமர் பிளேயர் விசாரணை ஒன்று அவசியம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆனால், அவரது பேச்சாளர் பாராளுமன்ற குழுவான கூட்டு உளவு பாதுகாப்புக் குழு இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவிலும் ஈராக் மீது தொடுக்கப்பட்ட யுத்தம் குறித்த விசாரணை நடத்த செனற்சபை திட்டமிட்டு வருகின்றது.



(பிளேயரு[illegible]ஷ்சும்)

## இந்திய மிக்-21 விமானம் விபத்துக்குள்ளாகி நொருங்கியது

ராஜஸ்தானில் இந்திய விமானப்படைக்குச் சொந்தமான மிக்-21 ரக போர் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி தரையில் விழுந்து நொருங்கியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அதன் விமானி உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை ராஜஸ்தானிலுள்ள உத்தரளை விமானத் தளத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் இந்த விமானம் தீப்பிடித்துள்ளது.

இதனால் கட்டுப்பாட்டை இழந்த விமானம் ராஜஸ்தானின் சிப்பாடி எனும் பகுதியருகே ஒரு வயலில் விழுந்து நொருங்கியுள்ளது.

இந்தக் கோர விமான விபத்தில் விமானி உயிரிழந்துள்ளதாக இந்திய விமானப் படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த விபத்துக் குறித்து நீதிமன்ற விசாரணைக்குள உத்தரவிடப்பட்டுள்ளது.

## யுத்தம் முடிந்ததாக அறிவித்த பின் 38 அமெ. படையினர் ஈராக்கில் பலி

### - பென்டகன் கவலை

ஈராக்கில் பாரிய யுத்த நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவு காணப்பட்டுள்ளதாக சனாதிபதி புஷ் பிரகடனம் செய்த பின்னர் அந்த நாட்டில் கொல்லப்படும் அமெரிக்க துருப்பினரின் தொகை அதிகரித்து வருவது குறித்து அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் கவலை தெரிவித்துள்ளது.

விபத்துக்கள் காரணமாக அமெரிக்கப் படையினர் பலர் பலியாகி உள்ளனர்.

யுத்தம் முடிவுற்றதாக அமெரிக்க சனாதிபதி மே மாதம் ஏழாம் திகதி பிரகடனம் செய்ததில் இருந்து இதுவரை 38 அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளனர்.

## திருப்பதி மலையிலிருந்து பேருந்து கவிழ்ந்தது

### 3பேர் நசுங்கிப் பலி; 44பேர் படுகாயம்

திருப்பதி மலையில் இருந்து அரசுப் பேருந்து கவிழ்ந்ததில் 03 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 44பேர் படுகாயமடைந்து உயிருக்குப் போராடி வருகின்றனர்.

ஆந்திர அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று நேற்று அதிகாலை திருப்பதி மலையில் இருந்து 51பயணிகளுடன் கீழ் திருப்பதிக்கு இறங்கிக் கொண்டிருந்தது.

மலையில் இருந்து ஒன்பது கிலோ மீற்றர் இறங்கிய நிலையில் குறுகிய வளைவு ஒன்றில் திரும்பும்போது, பிறேக் பிடிக்காமையினால் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து மலை உச்சியிலிருந்து சரிந்தது.

இதில் 02 பெண்கள் உட்பட 03பேர் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளனர்.44பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மலையில் இருந்து உருண்ட பேருந்து மலைச் சரிவில் உள்ள மரங்கள் மற்றும் தடுப்பு சுவர்களால் தடுக்கப்பட்டு 20அடி ஆழத்திலுள்ள நிலப்பகுதியில் விழுந்ததாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## பொடோவை மீளப்பெறுக

## தி.மு.க மீண்டும் வலியுறுத்து

(சென்னை)

பொடோ சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்ற கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

தி.மு. கட்சியின் தலைவர் மு.கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ்மொழியை மத்திய அரசின் செம்மொழிப்பட்டியலில் சேர்க்கப்படவேண்டும். இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழை அங்கீகரிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளது.



சிம்பாவ்வேயில் முகாபேக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஒரு பகுதியாக செய்திப் பத்திரிகைகள் எரித்தும்; கிழித்தும் விடப்பட்டுள்ளன. பத்திரிகை விற்பனையாளர் அவற்றைப் பார்வையிடுகின்றார்.



எகிப்தில் அமெரிக்க சனாதிபதி அரேபியத் தலைவர்கள் சந்திப்பு நடைபெற்ற விடுதி வாசலில் பலத்த பாதுகாப்பு

### - இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினை குறித்து -

## புஷ் - அராபிய தலைவர்கள் எகிப்தில் சந்தித்துப் பேச்சு

இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்தான மாநாடு எகிப்தில் நடைபெற்றுள்ளது.

இதில் இவ்விருநாடுகளுக்கிடையேயான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாக அமெரிக்க சனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சினைக்கான செயற்றிட்டம் ஒன்றை அமெரிக்கா ஏற்கனவே இவ்விரு நாடுகளுக்கும் ஏற்படுத்திக் கொடுத்துள்ள நிலையில் இது பற்றி விவாதிக்க அரபு நாட்டுத் தலைவர்கள் கலந்து கொள்ளும் முக்கிய மாநாடு எகிப்தில் நடைபெற்றுள்ளது.

இதில் அமெரிக்க சனாதிபதி புஷ், எகிப்து சனாதிபதி ஹொஸ்னி முபாரக், சவூதி மன்னன் அப்துல்லா, பலஸ்தீனப் பிரதமர் முகமட் அப்பாஸ் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மாநாட்டின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய புஷ் தீவிரவாதத்தை எதிர்ப்பதில் அனைத்துத் தலைவர்களும் ஒரே நிலைப்பாட்டுடன் இருப்பதாகக் கூறியுள்ளார்.

எனவே தீவிரவாதம் தலைவிரித்தாடும் இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

இதன் மூலம் இஸ்ரேல்-பலஸ்தீனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே நல்லெண்ண அடிப்படையில் இஸ்ரேல் அரசு ஏராளமான பலஸ்தீன போர்க் கைதிகளை விடுவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் தாக்குதல் பட்டியலில் அடுத்த குறி ஈ-ரான்....?

அ. கலைவாணி




ஈராக்கை அடுத்து அமெரிக்காவின் இலக்காக ஈரான் அமையவுள்ளது என்பதை அமெரிக்காவின் கண்டனமும், எச்சரிக்கையும் ஊர்ஜிதம் செய்கின்றன. ஈரான் தொடர்பாக, அண்மையில் அமெரிக்காவால் வெளியிடப்படும் குற்றச்சாட்டுக்கள் அடுத்த குறி ஈரானே எனப் பறைசாற்றுகின்றன.

ஆப்கானிஸ்தான் ஈராக் மீது போர் தொடுக்கும் முன்பு அமெரிக்கா எவை எவற்றைக் குற்றச்சாட்டுக்களாக இயம்பியதோ அதே போன்ற குற்றச்சாட்டுக்கள் ஈரான் மீது தொடுத்துள்ளது.

2001 செப்ரெம்பர் அமெரிக்காவின் உலக வர்த்தக மையம் தாக்குதலுக்கு உள்ளாக அல்-கைதா காரணம் என்றும், அல்-கைதாவின் தலைமைப் பீடம் ஆப்கானிஸ்தானில் உள்ளது.அதனால், எங்கள் நாட்டின் பாதுகாப்புக் கருதி ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுக்க உள்ளோம் என அறிவித்தே தொடரப்பட்டது போர்.

அதேபோன்று ஈராக் எமது நாட்டிற்கு அச்சுறுத்தலாகவும், பாரிய பேரழிவு ஆயுதங்களை தன்னகத்தே கொண்டுள்ளது என்று ஈராக் மீது போர் தொடர்ந்தது.

ஆப்கானிஸ்தானின் போரின் வடு இன்னும் மறைந்துவிடவில்லை. உலகில் இன்று தீவிரவாத செயல்களில் ஈடுபடுபவர்களில் ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பிச் சென்றவர்களும் அடங்குகின்றனர் எனும் கருத்தும் அரசியல் வட்டாரங்களில் நிலவும் அதேவேளை,

ஈராக்கின் ரணம் இன்னும் ஆறிப் போகவில்லை. அதற்கு முன்னரே அமெரிக்கா தனது அடுத்த குறியை வைத்திருப்பது நியாயமா எனும் நிலைப்பாடும் இல்லாமல் இல்லை.

அமெரிக்காவின் கொள்கைப்படி தீவிரவாதம் எங்கெல்லாம் இருப்பதாக தான் நினைக்கின்றதோ அங்கெல்லாம் போர்க் கொடி தூக்கவே அது தயாராக இருக்கின்றது

அந்த வகையில் தற்போது ஈரான் மீது அதன் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது.

ஈரான் அணுவாயுதம் தயாரித்து வருகின்றது. சியாத் தாக்குதலை நடத்திய அல்-கைதாவினர் ஈரானிலிருந்தே வந்தனர். பயங்கரவாதத்தை ஈரான் ஆதரிக்கின்றது என்பதுடன்,

ஈராக்கிலுள்ள மக்களை அமெரிக்கப் படைக்கு எதிராக ஈரான் தூண்டி விடுவதுடன், ஈராக்கில் இஸ்லாமிய மத ஆட்சியை ஏற்படுத்தவும் முனைப்புடன் செயற்படுகின்றது என அதன் குற்றச்சாட்டுக்கள் பரந்து விரிந்து செல்கின்றது.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்களை ஈரான் மறுத்துள்ளது. அணுவாயுதம் தயாரிப்பது என்பது பொய் என்றும், தமது சக்தி வளத் தேவைக்காகவே அணுவுலை அமைக்கும் பணியை மேற்கொள்வதாகவும் அது வாதிடுகின்றது.

ஆனால், எண்ணெய் வள நாடான ஈரானுக்கு எப்படி சக்தி வளத் தேவை ஏற்பட முடியும்.... அதனால் எதனையும் நம்புவதற்கில்லை என எதிர்வாதம் புரிகின்றது அமெரிக்கா.

1979ற்கு முன்னர் ஷா மன்னரின் ஆட்சியில் ஈரானை தனது கைப் பொம்மையாக்கி வைத்திருந்த அமெரிக்காவிற்கு, 1979இல் புரட்சி ஏற்பட்டு ஷா மன்னரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதும் பெரிய அடியாக மாறியது.

இதனை ஈடுகட்ட ஈராக்கைப் பயன்படுத்தத் துணிந்தது. ஈராக்கின் ஆட்சியிலிருந்த சதாம் ஹுசைனை அத்து மீறி ஈராக்கினுள் நுழைய வைத்தது.

எனினும், பல வருடம் நீடித்த இந்தச் சண்டையினால் எதுவித இலாபமும் ஏற்படவில்லை. மாறாக ஈராக்கிற்கு உதவியது மட்டும்தான் எஞ்சியது என அமெரிக்காவிற்கு கவலைமட்டும் தான் நிலுவையாயிற்று.

ஆனால், தற்போது அரிய சர்ந்தப்பம் அமெரிக்காவிற்கு கிடைத்துவிட்டது எனலாம். ஆப்கானிஸ்தான், ஈராக் நடுவே ஈரான் அமைந்துள்ளது. ஈரானின் இரு புறமும் உள்ள நாடுகளில் தற்போது அமெரிக்கா தான் ஆட்சி செய்கின்றது.


2001 செப்ரெம்பர் தாக்குதல்


பின்லேடன்

எனவே, இரு நாடுகளில் இருந்தும் ஈரானை தனது பிடியில் சிக்க வைக்க இலகுவாக முடியும் எனும் கருத்தும் நிலவுகின்றது.

அத்துடன், ஈரானில் மதவாத ஆட்சி நடைபெறுவதால் தனக்கு அடி பணியுமா...? என்பதுடன் தனது இரு புறமுள்ள நாடுகளில் அமெரிக்கப் படைகள் இருப்பதையும் அது விரும்புமா....? எனும் சந்தேகமும் வாஷிங்டனுக்கு உண்டு.

அது மட்டுமன்றி ஈராக்கிலுள்ள ஷியாக்களை தனக்கு எதிராக ஈரான் தூண்டிவிட்டுவிட்டால்.... அது தனக்கு ஆபத்தாகவும், தான் விரும்பும் ஆட்சியை ஈராக்கில் அமைக்கத் தடையாகவும் அமைந்துவிடுமே.... என ஐயமும் அமெரிக்காவிற்கு உள்ளதால்தான், ஈராக் விடயத்தில் ஈரான் தலையிடக் கூடாது என்றும், ஈராக்கில் ஈரான் மதவாத ஆட்சியை ஏற்படுத்த முனைவதை தடுக்கத் தயாராக உள்ளதாகவும் ஈரானின் எதிர்ப்பலைகளை முளையிலேயே கிள்ளிப்போட்டு விட அமெரிக்கா எத்தனிக்கின்றது.

இதற்காக ஈரானின் எதிர்ப்பாளர்களை அது நிதியுதவி அளிப்பதன் ஊடாக ஈரானில் மக்கள் எழுச்சிபெறவைக்க எத்தனிப்ப தாகவும் அரசியல் வட்டாரத்தில் புகைக்க ஆரம்பித்துள்ளது.


ஈரான் சனாதிபதி முகமது கடாபி

அதேநேரம், ஆப்கானிஸ்தான், ஈராக்கில் எதிர்ப்பாளர்கள் நாட்டினுள்ளேயே இருந்தமையினால் அமெரிக்காவிற்கு நன்மையளித்தமைபோல், ஈரானின் உள்ளே இல்லாத எதிர்ப்பாளர்களை வெளியே இருந்து கொண்டு வந்து கிளர்ச்சியை ஏற்படுத்துவது என்பது நடக்கக் கூடிய காரியமா...? எனும் கருத்தும் இல்லாமலில்லை.

இருந்தபோதும் அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக ஈரான் அல்-கைதா உறுப்பினர்கள் பலரைக் கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

ஆனால், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு இது போதாதே.... என அமெரிக்கா வாயைச் சுழிக்கின்றது.

தற்போது ஈரான் - அமெரிக்காவிடையே ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஈரான் எப்படி தீர்க்கப் போகின்றது என்பதே அவதானிகளிடையே நிலவும் வினாவாகவுள்ளது.

மறுபுறம், ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் புள்ளி பதித்துள்ள அமெரிக்கா இரு புள்ளிகளையும் இணைக்கும் நேர்கோட்டு முயற்சியில் ஈரானைக் கையாளாது என்பதில் என்ன நிச்சயம் இருக்க முடியும்? எனும் ஐயமும் அவதானிகளிடையே புகுந்துள்ளது.

ஆனால், அமெரிக்கா தமது விடயத்தில் வீணாக மூக்கை நுழைப்பதாக ஈரான் குறைப்பட்டும் கொண்டுள்ளது.

அதேபோல், அமெரிக்காவின் நடவடிக்கைகள் சர்வதேச சட்டங்களை மீறுவதாகவும், மனித உரிமைகளை மதிக்கத் தவறுவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது.

அத்தடன், அமெரிக்காவில் 2001 செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற உலக வர்த்தக மையம் தாக்கப்பட்ட பின்னர், அமெரிக்கா எடுத்த நடவடிக்கை காரணமாகவே உலகளாவிய ரீதியில் பயங்கரவாதம் தலைதூக்கியது என்றும் அந்த குற்ற அறிக்கை கூறுகின்றது.

ஆனால், யார் சொல்லியும் கேட்காத அமெரிக்கா, குற்றச்சாட்டுகளின் மூலம் மட்டும் தனது போர் எனும் மூர்க்கக் குணத்தை குறைத்திடுமா என்பது கேள்விக் குரியதாகும்.

மறுபுறம் அமெரிக்க சனாதிபதி புஷ் தாம் சமாதானத்தையே விரும்புவதாகக் கூறிக் கொள்வது வாய்ச் சொல்லோடு மட்டுமே நின்று விடுவதாக கவலையடைவோரும் இல்லாமலில்லை.

மறுபுறம் இன்று வரை அமெரிக்கா இன்னொரு வல்லரசுடன் மோதியதே இல்லை. கியூபா, வியட்நாம், கொரியா, கம்போடியா, லாவோஸ், தென்னாமெரிக்க நாடுகள், ஆப்கானிஸ்தான், ஈராக்.... என கண் விழிக்க காத்திருக்கும் நாடுகளைத்தான் அமெரிக்கா கடித்து குதறியிருக்கின்றது என்று விமர்சிப்பவர்களும் இருக்கின்றார்கள்.

இதைப் பார்க்கும்போது, அமெரிக்கா ஈரான் மீதான குறியை கைவிடுமா எனும் சந்தேகமும் சமாதானம் நோக்கிய பயணம் எனும் புஷ்ஷின் தீர்மானம் உண்மையாகுமா.... எனும் வினாவும்தான் தற்போதைய விடை தேடும் வினாக்களாக வுள்ளது.

அத்துடன், ஈரான் அமெரிக்காவை எப்படி சமாளிக்க.... அல்லது தாக்குப் பிடிக்கப் போகின்றது..... என்பது அடுத்த வினாவாகவும் உள்ளது. ●

# வடக்கு-கிழக்கை ஒன்றிணைத்து இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தக்கூடாது

## பௌத்த மதகுருமார் குழு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து பிரதமரும், சனாதிபதியும் தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று பௌத்த மதகுருமார் குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு அமைவாகவோ, மாகாண சபை சட்டத்தின் கீழோ வேறு அபிவிருத்தி ஆணைக்குழுவின் கீழோ வடக்கு-கிழக்கை ஒன்றிணைத்து இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த பிரதமர் முயன்றால், அதனை சனாதிபதி தனக்குள்ள அரசியலமைப்பு மற்றும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுக்க வேண்டும்.

புலிகளுக்கு சட்டபூர்வமான அதிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமாக தமிழீழம் உருவாக வாய்ப்பு ஏற்படும். இதனால் அதனை தடுப்பதற்காக சனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

டோக்கியோ மாநாட்டில் கிடைக்கும் பெருமளவு நிதியை புலிகளிடம் கையளிக்க ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணத்தை உடனடியாகப் பிரிக்க வேண்டும். அங்குள்ள சிங்கள மற்றும் ஏனைய இனங்களின் உறுதிப்பாட்டை நிலை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இக்குழு கோரியுள்ளது. இது தொடர்பாக பிரதமருக்கும், சனாதிபதிக்கும் இக்குழு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

## யாழ். அரச செயலகத்தில் பதியப்படாத பிறப்புக்களை பதிவு செய்வதற்கான சேவை

பதியப்படாத பிறப்புக்களை பதிவு செய்வது தொடர்பாக அதே இடத்தில் சேவை வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. பதியப்படாத பிறப்புக்களை அன்று பதிவு செய்து உடன் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பிறந்ததிகதியை உறுதிப்படுத்தும் வைத்தியசாலைக்கடிதம், தடுப்பூசிஅட்டை, பாடசாலைக் கடிதம், சாதகம்,ஞானஸ்நான சான்றிதழ் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் பெற்றோரின் பெயர் விபரங்களை உறுதிப்படுத்தும் பெற்றோரின் பிறப்புச்சான்றிதழ்,விவாக சான்றிதழ்,ஏனையபிள்ளைகளின் பிறப்புச்சான்றிதழ் சம்பந்தப்பட்டவர் விவாகம் செய்திருந்தால் அவரின் விவாக சான்றிதழ் பிள்ளைகளின் பிறப்பு சான்றிதழ் என்பவற்றில் கைவசம் உள்ளவற்றுடனும், பங்கீட்டு அட்டையுடனும் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை இருப்பின் அவற்றுடனும், தகப்பன் தாய் பிள்ளை மூவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும். இவர்களில் யாராவது ஒருவர் வரமுடியாது விட்டால் வரமுடியாமைக்கான காரணத்தை தகுந்த ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தவேண்டும். மேற்படி பதிவு செய்வதற்கான படிவங்களை தங்கள் பிரிவு கிராம சேவையாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். அன்று செயலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

# சூழல் பிரச்சினைகளில் எம் தேசப் பிரச்சினைகளை இணைக்கப்படுத்த முடியுமா?

சூழல் தொடர்பான விழிப்புணர்வு வாரம் என உலகளாவிய மட்டத்தில் நடைபெறும் கருத்துக்களை மீள் நினைவூட்டும் பொழுதுகளாக இந்த வாரம் தன் பணிகளைச் சூழலுக்கான பாதுகாப்புக்காகச் செலவிட்டுக் கொண்டிருக்கின்றது. சூழலைப் பேணுவதற்கான சூழல்ப் பாதுகாப்பு, சூழல் முகாமைத்துவம் ஆகிய இரு பெரும் செயல்ச் சான்றுகளும் எவ்வளவு மந்த கதியில் செயற்பட முடியுமோ அந்தளவு வேகத்திலேயே செயல்படுகின்றது. மறு நிலையில் சூழலின் பாதிப்புக்கள் வரையறையற்ற வேகத்தில் நிகழ்வதுடன் சூழலின் பெறுமானம் பற்றிய உணர் திறனும் படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றது. இந்தப் போக்கானது சூழலின் ஒழுங்கு விரைவிலேயே மனித சமூகத்தின் நிலைத் திருப்புக்கு எதிரானதாக மாறிவிடும் என்பதையே பெறுபேறாகத் தரப் போகின்றது. இனமுரண்பாட்டு யுத்தம் எம் தேசத்தைத் தன் ஆக்கிரமிப்பு மமதையின் காலடிக்குக் கொண்டு செல்லத் துடித்தது. அதற்கான முயற்சிக்காகச் செய்யப்பட்ட வெறுப்பு மிக்கப் போரினால் எமது தேசத்தின் சூழல் பெற்ற கோரமான பாதிப்புக்கள் உலகளாவிய சூழல்ப் பிரச்சினையாக சொல்லப்பட்டவையிலிருந்து வேறுபட்டதாக இருக்கும் நிலையில் இந்த வருடத்தில் வந்துள்ள சூழல் விழிப்புணர்வு நாட்களில் எம் மண்ணின் அவலத்தின் பால் உலகளாவிய எண்ணங்களைப் பகிர விரும்புவது இயல்பானதேயாகும். சர்வதேச ரீதியான நடுவு நிலைமையுடன் கடந்த ஒன்றரை வருடங்களாக நாம் அனுபவித்த வரும் சமாதான வாழ்வு உண்மையில் நிலை பேறுடையதாக மாற்றம் பெறுமானால் எமது இழந்த சூழலில் ஒரு வியத்தகு மாற்றம் வருமென்பது சாத்தியமானதாகும். தவிரவும் அது மறுக்கப்பட்டு யுத்தமே திணிக்கப்படுமானால் எம் தேசத்தின் உயிரினச் சூழல் இயல்புக்குரியதாக இருக்க மாட்டாது என்பதும் உறுதியானதாகும்.



சூழல் என்பது எம்மைச் சூழவுள்ள மனிதன்,மிருகம்,தாவரம், கடல்வாழ்வினங்கள், புவியுருக்கள் என்பவற்றை உள்ளடக்கிய உயிர்வாழ்வினச் சூழலையும் அவற்றிற்கிடையிலான தொடர்புகளையும் குறிக்கின்றது. இவ் உயிர்வாழ்வினச் சூழலின் மீது தற்சார்பற்ற முறையில் அல்லது நிலைத்திருப்புக்குரியவாறல்லாது இயற்கை ஒழுங்கின் மீது அகழ்வினை மேற்கொள்ளும் போது சூழல் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றது. மனிதனின் சுயநலனுக்கும் அவனது சமூக சிந்தனையற்ற நடவடிக்கை



காரணமாகவும் தனி நலனை உச்சப்படுத்துவதற்காக வரையறையற்ற பாவனை சூழல் பிரச்சினையை உருவாக்கக் காரணமாகின்றது.

உலகளாவிய நிலையில் சூழல் தொடர்பாக இனங் காணப்பட்டுள்ள பிரச்சினைகளாக.

1. ஓசோன் படை மிதான தாக்கம்
2. உலகம் வெப்பம் அடைந்து வருதல்
3. அமில மழை,அமிலநீர்ப் பிரச்சினைகள்
4. உயிரினப் பல்வகைத் தன்மை பாதிக்கப்படுதல்
5. காடழிப்பு, அயனவலயக் காடுகளின் இழப்பு
6. வெள்ளம்,வரட்சி
7. இரசாயனக் கழிவுகள் கொட்டப்படுதல்
8. கடல்வாழ் உயிரினங்களின் அழிவு
9. கரையோர தின்னல்
10. கடல் மட்டங்களின் உயர்வு
11. காபனீரொட்சைட்டின் தொடர்ந்த அதிகரிப்பு
12. மிஞ்சிய இரசாயனப் பாவனை
13. அணு உலகக் கசிவுகளும் பரிசோதனையும்

என்றவாறாக இந்தப் பிரச்சினைப் பட்டியல் தொடர்ந்து வருகின்றது. இந்த அம்சங்களை ஆராயும் நோக்கன்றி எமது தேசத்தின் சூழலும் அதன் ஒழுங்கின் மீது ஏற்பட்டுள்ள பாதிப்பையுமே இக்கட்டுரை தொட்டு நிற்க விரும்புகின்றது.

1980களின் பின்னர் தொடர்ந்து வந்த போர் எமது சூழலுக்கு ஏற்படுத்திய பாதிப்புக்கள் தான் வடகிழக்குப் பிரதேசத்தின் பிரதான சூழல் நெருக்கடியைத் தோற்றுவித்தது




என்பது மறுக்க முடியாதது. ஆனால் இப்பாதிப்புக்களை இனங் காட்டக் கூடியவாறான புள்ளியியல் மதிப்பீடுகளை நாம் இதுவரை மேற்கொள்ளவில்லை. அதுகூட யுத்தத்தின் போது புதைக்கப்பட்ட பெருந்தொகை மிதிவெடி பொருட்கள் இப்பிரதேசங்களைச் சென்று பார்க்கக் கூட முடியாத நிலையே ஏற்படுத்தியுள்ளன. இருந்த போதும் அண்மிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வடகிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்ட சூழல் முகாமைத்துவத் திட்டம் ஒன்றை நாம் தயார்படுத்தியே ஆக வேண்டும். இதுவரை இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை எமது மாகாணசபை தயார் செய்யவில்லை என்பது எமது பணியை கடுமையாக்கியேயுள்ளது. யுத்தம் ஏற்படுத்திய சூழலியல் தாக்கங்களை வரையறுக்கும் போது பின்வரும் பிரச்சினைகள் முன்மையானவை.

1. பயன்தரும் பனை, தென்னை மரங்கள் அழிக்கப்பட்டமை

2. காடுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள அதி தீவிரமான அழிப்பு நடவடிக்கைகள் மிதி வெடிவலயங்களும், காப்பரண்களுமாக வீணடிக்கப்பட்டுள்ள பல்லாயிரம் ஏக்கர் நிலங்கள் பாவனைக்குட் படுத்தப்படாமை.

3. காப்பரண்களும் பாதுகாப்பு வேலைகளினால் ஏற்படுத்தப்பட்ட நீர்வரத்து மீதான பாதிப்புக்கள்

4. மிதிவெடிகள், வெடிக்கும் பொருட்களால் தடுக்கப்பட்டுள்ள மனித விலங்குகளுக்கான சுதந்திர நடமாட்டம்.

5. இடப்பெயர்வு,விமானத் தாக்குதல், படைநடவடிக்கை காரணமாக ஏற்பட்ட குடிமனைகளின் இழப்பு

6. உவர்நீர் தடுப்பனைகளின் சிதைவுகளும், பராமரிப்பின்மையும் காரணமாக நிலம் உவராகும் நிகழ்வு அதிகரித்திருத்தல்.

7. நீரேந்துபரப்பில் நிகழ்ந்த காடழிப்பினால் நீர்வரத்துக் குறைந்தமை.

8. நீர்க்கட்டுமானங்களின் பராமரிப்பின்மை காரணமாக நிலத்தடி நீர் மட்ட இழப்பும், நீரின் வீணடிப்பும்.



அ.கேதீஸ்வரன் (B.A.Hons)

பயன்தரும் பனை, தென்னை ஆகிய மரங்களின் தேவை போருக்கான காலத்தில் வெட்டப்பட்ட மரங்களாக இருந்ததனால் கடந்த 20 வருட யுத்த தேவைக்குமான மரங்கள் எம்மண்ணில் இருந்தே வெட்டப்பட்டன. உதாரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 26,293 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை செய்கை இடம்பெறுகின்றது. இதில் பெருந்தோட்டமாகச் செய்கை இடம்பெறும் ஏக்கர்கள் 11,550 ஆகும். இதில் கரைச்சியில் 1250 ஏக்கர்களும், பூநகரியில் 1100 ஏக்கர்களும்,பச்சிலைப்பள்ளியில் 9,200 ஏக்கர்களும் செய்கை பண்ணப்படுகின்றன. பச்சிலைப் பள்ளியில் கோயில் வயல், இயக்கச்சி, பேராலை, தர்மங்கேணி, ஆகிய கிராமங்களில் இருந்த பெருந்தோட்டங்கள் 1990களின் பின் பூரணமாக அழிவுற்றன. கிளாலி முகமாலைப் பகுதிகளிலுள்ள தோட்டங்கள் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளடக்கப்பட்டதாலும், சூனியவலயத்திற்கும் உட்பட்டதால் அங்கு என்ன நிலை எனக் கூறமுடியாது. ஆனால் இப்போதும்கூட இங்கு மரங்கள் வெட்டப்பட்டுக் கொண்டேயுள்ளன. வேம்பொடுகேணி, இத்தாவில், கச்சார்வெளி, அரசர்கேணி பகுதிகளில் இருந்த தோட்டங்கள் 2000க்குப் பின் நிகழ்ந்த போரில் வெடிக்க வைக்கப்பட்ட பல்குழல்களாலும், விமானக் குண்டுகளாலும் சின்னாபின்னமாக்கப்பட்டன. இப்போது இப்பிரதேச செயலர்பிரிவில் 2100 ஏக்கர் நிலங்களில் மட்டுமே சேதங்களுடன் மரங்கள் எஞ்சியுள்ளன. பூநகரியில்,கௌதாரி முனை, பரமன்கிராய், மட்டுவில்நாடு வடக்கு,வாடியடி, ஞானிமடம், பள்ளிக்குடா கிராமங்கள் 1990களில் அழிக்கப்பட்டபோது அங்கிருந்த பெருந்தோட்டங்கள் அடியோடு வெட்டப்பட்டன.

காடுகளில்நிகழ்ந்த தீவிர அழிப்பைப்பற்றிக் கூறும்போது ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்காக இரணைமடுவின் நீரேந்து நிலப்பரப்பான கனகராயன் ஆற்று வடிநிலத்தின் பெரும் பகுதிகள் நினைவுக்கு வரும் கரிப்பட்ட முறிப்பு முதல் கரப்புக்குத்தி விஞ்ஞானகுளம், கனகராயன்குளம், ஓமந்தை என அமைக்கப்பட்ட புதிய வீதிக்காகவும் இக்காலத்தில் இக்காடுகளில் வெட்டி விற்கப்பட்ட மரங்களுமாக எத்தனை இழப்பு ஏற்பட்டது என்பது நினைவிடத்தக்கது.

மிதிவெடி வலயங்களாகக் காணப்படும் பரந்தன், தர்மங்கேணி வரையிலான பகுதிகளிலும் புளியங்குளம் பகுதிகளிலும் இவ் வலயங்களால் முழுக்க கைவிடப்பட்ட ஆபத்துப் பகுதிகளாகும். இது ஓர் எழுமாறு மட்டுமே, அதுபோல கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான நீர்மூலமான இரணைமடுவுக்கான நீர்வரத்தும் இரணைமடுவிலிருந்து வெளியேறும் பகுதிகளிலும் அமைக்கப்பட்டு அழிக்கப்படாதுள்ள இராணுவ அரண்களினால் எமது பெரும் பரப்பின் நீர் முறைமை மாற்றப்பட்டுள்ளது. கடந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட போது இவ் வணைகள் காரணமாயிருந்தது நாம் அனுபவ ரீதியாக அறிய முடிந்தது.

மிதிவெடி வலயங்களினால் எம் சுதந்திர நடமாட்டம் எத்தனையோ பகுதிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது. ஆனையிறவுக்கு அண்மையதாக வளம்செறிந்த தட்டுவான்கொட்டி பகுதியிலிருந்து வெளியேறிய 350 வரையான குடும்பங்கள் அம் மண் மீட்கப்பட்டு இருவருடங்கள் பூர்த்தியான பின்பும் மீள குடியமர முடிய வில்லை என்பது மிதிவெடிகள் ஏற்படுத்தும் அச்சுறுத்தலுக்கு ஓர் உதாரணமாகும். கண்டாவளையிலுள்ள கண்ணகி நகரில் தற்காலிக தங்குமிடங்களில் இம்மக்கள் எவ்வளவு துயரங்களுடன் இருக்கின்றார்கள் என்பது எம் சூழலுக்கு நிகழ்ந்த பாதிப்பு வேறுபட்டது என்பளதனை உணர போதுமானதாகும்.

பூநகரியிலும் பரந்தன் குடமுறுட்டி யாறுப் பகுதிகளிலும் செம்மண் குன்று, ஆலங்கேணி, ஞானிமடம், கறுக்காய்த்தீவு, செல்லையாதீவு, சித்தங்குறிச்சி, சோரன்பற்று, தர்மங்கேணி, அல்லிப்பளை பகுதிகளில் உவர் நீர் உட்புகுவதன் மூலம் பெருமளவு செய்கை நிலங்கள் உவராகிவருகின்றன. இதற்குரிய காரணம் இந்நீரைத் தடுப்பதற்கான அணைகளை புனரமைக்க முடியவில்லை என்பதுதான் எமது நிலையாகும்.

இந்த அடிப்படையில் உலகளாவிய சூழல் நெருக்கடி என்பது சமகால வளங்கள் உயர்வாகப் பாவிக்கப்படும் நிலை காரணமாக எழும் பிரச்சினையாக இருக்கும் போது எமது மண்ணிலே இருக்கும் வளங்களை அனுபவிக்க முடியாத நிலையில் எழும் சூழல் பிரச்சினைகளைக் கொண்டிருப்பது எமது பார்வையிலும் அணுகுமுறையிலும் தேவையான செயற்றிட்டம் வேறுபட்டது என்பதனையே வெளிக்காட்டுகிறது. சமாதான சூழலில் எம் மண்ணுக்கு உலக கரிசனை திருப்பப்பட்டுள்ள நேரத்தில் யுத்தம் பறித்துவிட்ட எமது வாழ்க்கையை மீள புனர்நிர்மாணம் செய்ய எனது இயல்புச் சூழலையும் திருப்பித்தர முயற்சிக்க வேண்டும். அதற்காக உருப்படியாக ஏதாவது செய்யப்பட வேண்டும் என்பதுவே இவ்வாண்டில் சூழல் நாள் எதிர்பார்ப்பாகும்.

***



## வற்றாப்பளை கண்ணகி அம்பாள் கோவில்

# முக்கிய அறிவித்தல்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு வியாபார நிலையம் அமைப்பவர்களுக்கான இடம் (பதிவு செய்தவர்கள், செய்யாதவர்கள் உட்பட) 4-6-2003 நேற்று மு.ப.10.00 மணிதொடக்கம் அளந்து வழங்கப்படுகிறது. உரியபணத்தினைச் செலுத்தி தங்களது நிலத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வர்த்தகர்கள் வேண்டப்படுகின்றனர்.

(சி-8133)

மு.குகதாஸ்
தலைவர்

பரிபாலன சபையினர்.

## பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வ-து]

## 2003 கிளைக்குழுத்தேர்தல்

# அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வடக்கு-கிழக்கு) அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டதும், 1998 .05.19ஆம் திகதி 1028/6 இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தகமானியில் வெளியிடப்பட்டதுமான வடகிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளைக்குழுக்களைத்தெரிவு செய்வதற்கான விதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளிற்குமான கிளைக் குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக்கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக ஒழுங்குகள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,கிளிநொச்சி அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திகதி: 14-06-2003 சனிக்கிழமை**
**நேரம்: முற்பகல் 9.30 மணி**

| தொ. இல. | கி. இலக்கம் | கிளையின் பெயர் | கிளை பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 10 | கிராஞ்சி | கிராஞ்சி அ.த.க. பாடசாலை |
| 02. | 11 | வேரவில் | வேரவில் மகாவித்தியாலயம் |
| 03. | 12 | வலைப்பாடு | வலைப்பாடு அ.த.க. பாடசாலை |
| 04. | 13 | முழங்காவில் | முழங்காவில் ம. வித்தியாலயம் |
| 05. | 14 | இரணைதீவு | இரணைதீவு றோ.க.அ.த.க.பாடசாலை (இரணைமாதா நகர்) |
| 06. | 15 | பல்லவராயன் கட்டு சோலை | இல-111 கரியாலை நாகபடுவான் அ.த.க. பாடசாலை |
| 07. | 16 | நாச்சிக்குடா | நாச்சிக்குடா அ.த.க. பாடசாலை |
| 08. | 18 | ஜெயபுரம் | ஜெயபுரம் அ.த.க. பாடசாலை |
| 09. | 20 | குமுழமுனை | குமுழமுனை அ.த.க பாடசாலை |

**திகதி: 15-06-2003 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: முற்பகல் 9.30 மணி**

| தொ. இல. | கி. இலக்கம் | கிளையின் பெயர் | கிளை பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 01 | மட்டுவில் நாடு | பூநகரி மகாவித்தியாலயம் |
| 02. | 02 | வில்லடி | பூநகரி மகாவித்தியாலயம் |
| 03. | 03 | ஞானிமடம் | ஞானிமடம் அ.த.க. பாடசாலை |
| 04. | 04 | செட்டியகுறிச்சி | செட்டியகுறிச்சி கிளை நிலையம் |
| 05. | 05 | கறுக்காய்த்தீவு | கறுக்காய்த்தீவு அ.த.க. பாடசாலை |
| 06. | 06 | தம்பிராய் | தம்பிராய் அ.த.க. பாடசாலை |
| 07. | 07 | மறவகுறிச்சி | செல்விபுரம் அ.த.க. பாடசாலை |
| 08. | 08 | நல்லூர் | நல்லூர் மகாவித்தியாலயம் |
| 09. | 09 | கௌதாரிமுனை | கௌதாரிமுனை அ.த.க. பாடசாலை |
| 10. | 10 | சாமிப்புலம் | சாமிப்புலம் அ.த.க. பாடசாலை |

### முக்கிய குறிப்புக்கள்

01.இடம் பெயர்ந்த மக்கள் முற்று முழுதாக மீளக் குடியமராத காரணத்தினால் வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. இந்த அறவித்தலை சொந்த அறிவித்தலாகத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

02.இது சம்பந்தமான மேலதிக தகவல்களைக் கிளை நிலையங்களிலும், தலைமை அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

பொதுச் செயலாளர்,
பூநகரி ப.நோ.கூ. சங்கம்,
பூநகரி, வாடியடி.

(8135)

-டோக்கியோ மாநாட்டில்-

# அரசின் சார்பில் ரணில், பீரிஸ் மொறகொட கலந்துகொள்வர்

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் சிறிலங்கா அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் உட்பட அமைச்சர்களான ஜி.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட மற்றும் திறைசேரியின் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அரசாங்கவட்டாரங்கள்தெரிவித்துள்ளன.இதே வேளை இம்மாநாட்டில் 35க்கும் மேற்பட்ட நாடுகளும்இருபதுக்கும்மேற்பபட்டசர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளும கலந்து கொள்ளவுள்ளனர்.

# அரசின் புதிய ஆலோசனைகள் பற்றி ஆராய்ந்த பின்பே கருத்துக் கூறுவோம்

எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ

சிறிலங்கா பிரதமரினால் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் குறித்து ஆராய்ந்த பின்னரே அது பற்றிக் கருத்துக் கூற முடியும் என்று எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் விடுதலைப் புலிகளுக்கு முன்வைக்கப்பட்ட இடைக் கால நிர்வாகக் கட்டமைப்பு நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவரிடம் செய்தியாளர்கள் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து தனது நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# மண்சரிவு ஏற்படக்கூடிய 260 இடங்கள் இனங்காணல்

மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு இருபது பேர்ச்சஸ் வீதம் காணிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பான விபரங்களைப் பெற்றுத் தரும்படி அந்தந்த மாவட்டச் செயலாளர்களைக் கோரியுள்ளதாக அமைச்சர் கருஜெயசூரிய நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்துள்ளார்.

வெள்ள அனர்த்தம் தொடர்பாகச் சபைக்கு விசேட அறிக்கையினைச் சமர்ப்பித்து பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வெள்ள அனர்த்தம், மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் மேலும் 260 மண்சரிவுகள் ஏற்படக் கூடிய இடங்களை விசேட நிபுணத்துவக் குழு இனங்கண்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் இத்தகைய இடங்களில் வாழ்ந்து வந்த 150 குடும்பங்கள் அவர்களது இடங்களை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். மண்சரிவு அனர்த்தங்கள் தொடர்பாக ஆராயவென எட்டு விசேட நிபுணத்துவக் குழுக்கள் சம்பந்தப்பட்ட பகுதிகளில் தமது பாரிய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது என்பதையும் சபையில் குறிப்பிட விரும்புகின்றேன் எனவும் அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்தார்.

மண்சரிவு அபாயம் காணப்படும் பகுதிகளில் உள்ள மக்களை மாற்று இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

ஜே.வி.பி. ஏற்பாடு செய்கிறது

வடக்கு- கிழக்கிற்கு தனியான இடைக்கால நிர்வாக சபையை வழங்கல், உட்பட டோக்கியோ மாநாட்டுக்குப் புலிகளை பங்குபற்றச் செய்வதற்கு அரசு எடுக்கும் முயற்சிகளைக் கண்டித்து ஜே.வி.பி. எதிர் வரும் 06.ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக மாலை 3.00 மணிக்கு ஆர்ப்பாட்டத்தை நடத்த ஜே.வி.பி.ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

# ஆனைக்கோட்டையில் சிறுமி மீது ஐவர் பாலியல் வல்லுறவு முயற்சி

அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

(வடமராட்சி)

ஆனைக்கோட்டைப் பகுதியில் வீடு ஒன்றில் தனித்து இருந்த சிறுமி மீது ஐந்து இளைஞர்கள் பாலியல் வல்லுறவு மேற்கொள்ள முற்பட்டுள்ளனர்.

பன்னிரெண்டு வயதுடைய இச்சிறுமி வீட்டில் தனித்திருந்த போது வீட்டினுள் புகுந்த இந்த ஐந்து இளைஞர்களும் சிறுமி மீது பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்டுள்ளனர்.

இச்சமயம் சிறுமி எழுப்பிய கூக்குரலை அடுத்து அங்கு திரண்ட பொதுமக்களால் சிறுமி மீட்கப்பட்டதுடன் இளைஞர்களும் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். (27)

## தமிழக அகதி முகாமிலிருந்து 20பேர் மன்னார் வந்தனர்

தமிழகம் அகதி முகாமில் இருந்து ஈழத்தமிழ் அகதிகள் இருபது பேர் மன்னார் வந்து சேர்ந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு இவர்கள் மன்னார் வந்துசேர்ந்தனர். ஆறு குடும்பங்களைச் சேர்ந்த எட்டு ஆண்களும், ஆறு பெண்களும் நான்கு குழந்தைகளுமே இவ்வாறு வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு மிக விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளனர். (மி.)

## தென்னைநாற்று விற்பனை

பூநகரி ப.நோ.கூ. சங்கத்தில் தரமான தென்னை நாற்று விற்பனைக்கு உள்ளது தேவையானோர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். விலை ரூ.40/= 100ற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

திரு. ந. பாலசுப்பிரமணியம்,
பொதுமுகாமையாளர், பூநகரி
ப.நோ.கூ.சங்கம்.

(சி-8134)

### சிந்தனைக்கு



கண்டதும் - கடினமானதும் அபாயகரமானதுமான தமிழீழ யுத்தத்தில் எமது விடுதலை வீரர்கள் சந்தித்த இன்னல்களை, இடையூறுகளை, துன்பங்களை எழுத்தில் விபரிக்க முடியாது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 05-06-2003

## புல்லுக்கே பொசிந்து விடும்!

இலங்கைக்கு உதவி வழங்குவோர் பங்கேற்கும் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் பங்கேற்பதற்கான வாய்ப்பு பெரும்பாலும் அற்றுப்போயுள்ளது. இவ்வாறு விடுதலைப்புலிகள் பங்கேற்காமல் போகின்றமையானது விடுதலைப்புலிகள் உட்பட சகலருக்கும் ஒரு வகையில் ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாகவே இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

இவ் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கேற்காமல் போனமையானது - யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளாகியுள்ள மக்களுக்குப் பெரும் இழப்பானதொன்றாக அமையும் என்பது பொதுவானதொரு அபிப்பிராயமாக/ பிரச்சாரமாக அமையக்கூடியதொன்றாகும். அதாவது, புனர்நிர்மாணம், புனர்வாழ்வு என்ற ரீதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கப்பெறும் உதவிகள் கிடைக்கப்பெறாது போய்விடலாம் என்பது இவ் அபிப்பிராயம் கொண்டவர்களின் சிந்தனையாகும்.

இவர்கள் சிந்திப்பதென்பது முற்றிலும் தவறென்பதில்லை. யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்ட பிரதேசங்களை புனர்நிர்மாணப் பணிகளுக்கென குறிப்பிடத்தக்க நிதியை உதவி வழங்கும் நாடுகள் வழங்கப்படுவதற்குத் தயாராக உள்ளன என்பது உண்மையே. இந்நிலையில் விடுதலைப் புலிகள் இம்மாநாட்டில் பங்குபற்றாதுபோனால் இந்நிதியில் வெட்டு ஏற்பட்டுவிடலாம் என்பதே அவர்களின் வாதமாகும்.

ஆனால், புனர்நிர்மாணம், புனர்வாழ்வு என்பனவற்றிற்காகக் கிடைக்கப் பெறும் நிதி உதவிகளைக் கையாளக்கூடிய அதிகாரங்களுடன் ஒரு நிர்வாகக் கட்டமைப்பு விடுதலைப்புலிகளிடம் இல்லாதவிடத்து கிடைக்கப்பெறும் நிதி உதவி யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களை முழு அளவில் சென்றடைவதற்கு/ வந்து சேருவதற்கு வாய்ப்பு எதுவும் உண்டா? அதாவது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி - வாய்க்கால் வழி ஓடுகையில் புல்லுக்கே பெருமளவில் போவதை எவராலும் தடுத்துவிட முடியுமா?

உதவி வழங்குபவர்கள் நிதியுதவி சென்றடைவதை மேற்பார்வை செய்வர், நிதியுதவி வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதை தடை செய்வர் என்பது போன்ற வாக்குறுதிகள் வழங்கப்படலாம். அத்தகைய மேற்பார்வை நடவடிக்கைகள் ஏற்கனவே வழக்கத்தில் உண்டு.

ஆனால், கடந்த கால அனுபவமானது, இத்தகைய கண்காணிப்புக்களினால் பயன் ஏதும் உண்டா என்ற கேள்வியை எழ வைப்பவையாகவே உள்ளன. ஏனெனில், கடந்த காலத்தில் சிறிலங்கா அரசு பெற்றுக் கொண்ட அபிவிருத்தி உதவி நிதியின் பெரும் பங்கை யுத்தத்தில் செலவிட்டுள்ளது. அவ்வேளைகளிலும் இத்தகைய கண்காணிப்புக்கள் இருந்தன என்பதே உண்மையாகும்.

இது மட்டுமல்ல, சிறிலங்கா அரசியல் வாதிகள் சில விடயங்களில் விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டாலும்கூட உயர் அதிகாரிகள் மட்டத்தில் நிலவும் இனவெறிப் போக்கானது வடக்கு-கிழக்கின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. அண்மையில்கூட 'சிரானின்' தோல்விக்கு இனவெறியில் ஊறிய சில அதிகாரிகளின் பங்கும் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. முன்னர் கூட வடக்கு - கிழக்கை சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமிக்கும் திட்டம் அரசியல் வாதிகளிடம் இருந்து உருப்பெற்றதாயினும் அதற்கு செயல் வடிவம் கொடுத்தவர்கள் இவ் அதிகாரிகளே. சில அதிகாரிகள் அரசியல் வாதிகளின் எதிர்பார்க்கைகளையும் மேவியதாகச் செயற்பட்டதும் உண்டு.

அத்தோடு, அரசாங்கமும் சரி, அதிகாரிகளும் சரி யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளான வடக்கு - கிழக்கு மக்களிடம் மனிதாபிமானத்துடனும் நீதியாகவும் நடந்துகொள்வார்கள் என எதிர்பார்ப்பதற்கும் இல்லை. இதற்கு கடந்த கால அனுபவங்களே போதுமானவையாகும். இயற்கை அனர்த்தங்களின்போதுகூட இதனை அவதானிக்கக்கூடியதாக இருந்துள்ளது. அதாவது, தமிழ் மக்கள் ஏரவஞ்சனையாகவும், மாற்றான் தாய் மனப்பான்மையுடனும் நடத்தப்பட்டதுண்டு.

இதற்கு மறுவளமாக, அரச அதிகாரிகளின் செயற்றிறன் இன்மையும் கிடைக்கப்பெறும் நிதி உதவிகள் கூட பாதிப்பிற்குள்ளான மக்களைச் சென்றடைய வழிசெய்யுமா? என்பதும் முக்கிய கேள்வியாகும். சிறிலங்கா அதிகாரிகளின் செயற்றிறன் இன்மை காரணமாக வருடாந்தம் சிறிலங்காவிற்குக் கிடைக்கப்பெறும் நிதியுதவிகளில் கணிசமான நிதி உதவிகள் பயன்படுத்தப்படாமல் போவதை சிறிலங்காவிற்கு உதவும் உலக நிதி நிறுவனங்களோ சுட்டிக்காட்டியும் உள்ளன.

இந்த நிலையில், யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளான வடக்கு-கிழக்கு மக்களுக்கான புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளத்தக்கதானதொரு அதிகாரமும், சட்டவலுவும் கொண்டதொரு நிர்வாகக் கட்டமைப்பு இல்லாத பட்சத்தில் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகள் என்பன அரசியல் வாதிகளினதும், அதிகாரிகளினதும் சட்டைப்பைகளையும், வயிற்றையும் நிரப்புபவையாகவே இருக்க முடியும். மக்களுக்கு எலும்பை வீசிவிட்டு அவர்கள் இறைச்சியைச் சாப்பிட்டுவிடுவார்கள். இவற்றை, விளங்கிக் கொண்டும் டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்கேற்பார்களேயானால் மோசடிக்குத் துணைபோவது மட்டுமல்ல, எமது மக்களுக்குச் செய்யும் துரோகமாகவும் அது ஆகிவிடும்.

# வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு இடைக்கால நிர்வாகம் அவசியம்

## மக்கள் சமாதான முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுக்கள் தொடரவேண்டியதன் அவசியத்தை மக்கள் சமாதான முன்னணி வலியுறுத்தியுள்ளது.

140 அமைப்புக்கள் அடங்கிய இந்த முன்னணி விடுத்திருக்கும் அறிக்கையில்;

சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டமை கவலை தருகிறது. டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாமல் விடுவதை சமாதானப் பேச்சுக்களின் தோல்வியாகக் கருத முடியாது.

இவ்வாறு பங்குபற்றாமல் விடுவது முக்கிய கோரிக்கை ஒன்றை மையமாக வைத்துத் தெரிவிக்கப்படும் ஆட்சேபனையாகும்.

வடக்கு-கிழக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு என்பவற்றுக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியமாகும்.

அரசாங்கமும், பொதுசன ஐக்கிய முன்னணியும் இது தொடர்பாக ஒரு இணக்கத்திற்கு வரவேண்டும். எனினும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி உருவாக்கப்படுவது சமாதான முயற்சிக்கு ஆக்கபூர்வமான சமிக்ஞையாக அமைய முடியாது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரஞ்சித்கொலை சூத்திரதாரி எனக் கருதப்படும்

# சூரியவாவி பாதாள உலகக் குழுத் தலைவர் தனியார் மருத்துவ மனையில் வைத்துக் கைது

தென்மாகாண சபை அமைச்சர் ரஞ்சித் கொலையில் தொடர்புள்ளவராகக் கருதப்படும் "சூரிய வாவி" பாதாளக் குழுத் தலைவரான வீரக்கொடி அல்லது ராகுல என்பவர் நுகேகொடவில் தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் போது கைது செய்யப்பட்டுள்ளார். இதற்கிடையில் அவரின் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் இன்னும் 72 மணித்தியாலயங்களுக்குள் கைது செய்யப்பட்டு முழுநாட்டிற்கும் உண்மைநிலையை வெளியிடப்படும் என தென்பகுதிக்குப் பொறுப்பான பதில் பொலிஸ் மா அதிபர் பிரதாப் சிங்க தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் மறைந்துள்ள இடங்களைக்கண்டு பிடித்துள்ளதாகவும் அவர்களைக் கைது செய்யப்பொலிசார் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் முன்பு பிக்குவாக இருந்ததாகவும் பின்னர் தமது சகோதரனுடன் சேர்ந்து வன்முறைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் இராணுவத்தினருக்கான கட்டட ஒப்பந்தக்காரராக செயற்பட்டு பலகோடி ரூபா மோசடியில் ஈடுபட்டவரெனவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. பின்னர் இவர் மாதாந்தம் பொலிசில் சென்று கையெழுத்திட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இவர் ரகசியமாக நுகேகொடயில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைபெற வந்தபொழுது பொலிசாரிடம் சிக்கியுள்ளார்.

# அரசின் வன்செயல்கள் தொடர்பாக விபரம் திரட்டப் பொ.ஐ.மு குழு நியமித்தது

இந்நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களைத் தடுக்கும் வகையில் உள்துறை அமைச்சுப் பொறுப்பை சனாதிபதி கையேற்க வேண்டுமென சில பொ.ஐ.மு பாராளுமன்ற உறுப்பினர்கள் சனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 02ம்திகதி சனாதிபதி மாளிகையில் அவரைச் சந்தித்த எம்பிக்கள் இதனை ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளனர். இது தொடர்பாக சனாதிபதி சந்திரிகா தெரிவிக்கையில்; நாட்டில் நடைபெறும் வன்செயல்களை மாவட்ட, தொகுதி மட்டங்களில் விபரங்களைத்திரட்டி தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூறியுள்ளார். இந்நடவடிக்கையை மேற்கொள்ளவென பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபாலடி சில்வாவின் தலைமையின் கீழ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கையின் பிரதிகள் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கும், தூதர்களுக்கும் அனுப்பிவைக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# சச்சின், முரளிதரன் புதிய தரப்படுத்தலில் முதலிடம்

அவுஸ்திரேலிய, மேற்கிந்திய ஒருநாள் தொடரின் பின் மேற்கொள்ளப்பட்ட புதிய ஒருநாள் தரப்படுத்தலின் பிரகாரம் துடுப்பாட்டத்தில் சச்சின் டெண்டுல்கரும், பந்துவீச்சில் முத்தையா முரளிதரனும் முதலிடங்களைப் பெற்றுள்ளனர்.

சச்சின் டெண்டுல்கார் 773 புள்ளிகளையும் முரளிதரன் 901 புள்ளிகளையும் பெற்று முதலிடங்களுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

இலங்கை வீரரான சனத் ஜெயசூரிய துடுப்பாட்டத்தில் 725 புள்ளிகளுடன் எட்டாவது இடத்திலும், பந்துவீச்சில் சமிந்தவாஸ் 773 புள்ளிகளுடன் ஆறாவது இடத்திலும் உள்ளனர்.

மேற்கிந்திய வீரர்களான ராம் நரேஷ்சர்வான், கிறிஸ் கேயில் ஆகியோர் எடுத்த எடுப்பிலேயே துடுப்பாட்ட வரிசையில் இரண்டாவது, ஆறாவது இடங்களுக்கு முன்னேறியிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# பிரெஞ் ஓப்பன் டென்னிசில் அகாஸி தோல்வி

பிரான்சில் நடைபெற்றுவரும் பிரெஞ்ஸ் ஓப்பன் டென்னிஸ் போட்டிகளில் அமெரிக்காவைச் சேர்ந்த ஆந்திரே அகாஸியை கோரியா 4:6,6:3, 6:2, 6:4 எனும் செட்களைக்கில் தோற்கடித்துள்ளார்.

மற்றொரு போட்டியில் நெதர்லாந்தின் மார்டின் பெர்க்கே ஸ்பெயினின் கார்லஸ் மோயாவைக் 6:3, 6:4,5:7,4:6,8:6 எனும் செட்கணக்கில் தோற்கடித்து அரையிறுதிக்குள் நுழைந்துள்ளார்.

ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் லியாண்டர் பயர்ஸ்செக் குடியரசின் டேவிட் றிக்கிள் இணை தகுதிபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிப்போட்டியினை இந்த இணை 3:6,7:5,6:3 எனும் செட்கணக்கில் இந்தியாவின் மகேஸ் பூபதி பெலாரஸ்ஸின் மார்க்ஸ் இணையைத் தோற்கடித்தது.

அரையிறுதியில் பேஸ்ஜோடி அமெரிக்காவின் டார்க்கஸபிரேட், மைற்பிரேட் இணையைச் சந்திக்கின்றது. மகளிர்பிரிவின் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதியில் பிரான்சின் அமேலி மொறஸ்மோவை 6:1,6:2 எனும் நேர் செட்கணக்கில் எளிதில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்துள்ளனர்.

மற்றொரு காலிறுதியில் பெல்ஜியத்தின், ஜஸ்டின் ஹெனினின் 6:3,6:2 எனும் செட்கணக்கில் அமெரிக்காவின் சந்ரா பிரபினைத் தோற்கடித்துள்ளார். மற்றொரு காலிறுதியில் பெல்ஜியத்தின் கிம்கிளைஸ்டர்ஸ் ஸ்பெயினின் நாட்டின் கொஞ் சிதா மாட்டினைஸ் தோற்கடித்து அரையிறுதிக்குள் நுழைந்துள்ளார்.

# இந்திய வீரர் ஜடேஜா மீண்டும் பிரகாசிக்கிறார்.




ஆட்ட நிர்ணய விவகாரத்தில் ஐந்துவருட ஆட்டத்தடைக்கு இலக்காக இருந்த இந்திய வீரர் அஜேய் ஜடேஜா உள்ளூர் போட்டிகளில் துடுப்பெடுத்தாடி சிறப்பாகப் பிரகாசித்து வருகின்றார்.

அல்சஹாரா கிண்ணத்துக்கான சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெற்ற இரண்டு போட்டிகளில் 45. ஆட்டம் இழக்காமல் 101ஓட்டங்களைப் பெற்றுத் தனது திறமைகளை மீள வெளிக்காட்டியுள்ளார்.

ஞாயிறன்று இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் 78 பந்துகளை எதிர்கொண்டு அவர் ஆ.இ 101 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

ஜடேஜாவின் இந்த ஆட்டத்தை ஆயிரம் ரசிகர்கள் கண்டுகளித்தனர். 8 பவுண்டரிகளும், 6 சிக்ஸர்களும் இதில் அடங்கியிருந்தன.

ஒரு நாள் கிரிக்கெட்டில் சிறப்பாகப் பிரகாசித்த ஜடேஜா 196 ஒரு நாள் போட்டிகள் மூலம் 5,339 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 6 செஞ்சரிகளும், 30 அரை சதங்களும் இதில் அடங்கியுள்ளன.



- எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் -

# கிளி.யில் திருக்குறள் மாநாடு சிறப்புற நடத்த ஏற்பாடு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தமிழ்ச்சங்கம் நடாத்தும் திருக்குறள் மாநாடு எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் சிறப்புற நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

திருக்குறள் கருத்தரங்கு, திருவள்ளுவர் விழா என இரு பிரிவுகளாக நடைபெறும். இவ்விழாவில் முதல் நாள் விழாவில் (8ஆம் திகதி) பல அறிஞர்கள் கலந்து கொள்ளும் திருக்குறள் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது. காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இக்கருத்தரங்கிற்கு யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் க.சண்முகதாசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில், முனைவர் மனோன்மணி சண்முகதாசு முனைவர் எஸ்.சிவலிங்கராசா, திரு.பொன் கணேசமூர்த்தி, பேராசிரியர் நா.ஞானகுமரன், திருமதி.பி. மதுரநாயகம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். இரண்டாம் நாள் நிகழ்வு 9ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கலை பண்பாட்டு ஊர்வலத்துடன் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து ஆரம்பமாகும்.

இவ் ஊர்வலம் பதாகை, மங்கள இசை, அணிவகுப்பு, வேடப்புனைவு, கலைநிகழ்வுகள் என்பவற்றுடன் கிளிநொச்சி உயர் நிலைப்பள்ளி (மகாவித்தியாலயம்) வந்தடையும்.

இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகளாக திருவள்ளுவர் விழாவும், பரிசளிப்பு விழாவும் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு.க.கனகரத்தினம் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவுகள், விருந்தினர் உரை போன்றவையும் பரிசில்கள் வழங்கல், கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

### இடைக்...

என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

விடுதலைப் புலிகளின் பெரும்பங்கேற்போடு வடக்கு-கிழக்கிற்கான அரசியல் நிர்வாகக் கட்டமைப்பாகவே இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகள் பரிந்துரைத்துள்ளனர். ஆனால் மட்டுப்படுத்தப்படாத அதிகாரங்களைக் கொண்ட விடுதலைப்புலிகளின் பங்கேற்பு வரையறுக்கப்படாத அபிவிருததிக்கட்டமைப்பை உங்களது அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது. இதில் விடுதலைப்புலிகளின் பங்கேற்பு விவாதம் மற்றும் விளக்கத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ளது. நாங்கள் ஏற்கனவே உங்களுக்குத் தெரிவித்துள்ளபடி 2002ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தாய்லாந்தில் நடைபெற்ற ஆரம்பகட்ட சமாதானப் பேச்சுவார்த்தையின் போது இடைக்கால நிர்வாகக்கட்டமைப்புத் தொடர்பாக நாங்கள் பேசியிருந்தோம். ஆனால் அரசியல் அமைப்பு எழுப்பும் தடைகளை தவிர்க்கும் நோக்கோடு எங்களுடைய பரிந்துரைக் குப்பதிலாக புதியகட்டமைப்பு மற்றும் செயல்நுட்பம் பரிந்துரைக் கப்பட்டுள்ளது. அதன்பின் காலப் போக்கில் இடைக்கால நிர்வாகம் தொடர்பான எங்களது பரிந்துரை வித்தியாசமான வடிவங்களையும் செயற்பாடுகளையும் அதிகாரங்களையும் எடுத்துள்ளது.

இணைந்த செயல் கூட்டணியாக வடிவமெடுத்த எங்கள் பரிந்துரை பின்னர் உடனடி மனிதாபிமான மற்றும் மீள் புனரமைப்புத் தேவைக்கான உபகுழுவாக மாற்றமெடுத்தது. இறுதியாக வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் மீள்கட்டமைப்புச்சபை என்ற நிலைக்கு வந்தது. தற்போது அது புதிய அபிவிருத்திக்கான உயர்மட்ட சபை என்ற வடிவம் எடுத்துள்ளது. ஆனால் உங்களது அரசின் நிர்வாகக் குழுக்களின் கட்டமைப்புக்களின் இத்தகைய விநோதமான பரிணாம வரலாறு இத்தோடு நிறைவு பெற்றுவிடவில்லை. நீங்கள் பரிந்துரைத்துள்ள புதிய கட்டமைப்பை விளக்கப்படுத்தி விரிவு படுத்தவும் அந்தக் கட்டமைப்பில் விடுதலைப்புலிகளின் பங்கேற்பை வரையறுக்கவும், பேச்சுவார்த்தை நடாத்த பரிந்துரைத்துள்ளீர்கள்.

எத்தகைய புதிய அரசியல் நிர்வாக முறையின் இறுதி வடிவத்தை எட்ட இரண்டு தரப்பினரும் எத்தனை கட்டப் பேச்சுவார்த்தைகளை நடாத்த வேண்டி இருந்திருக்கும் என்று எங்களால் ஊகிக்க முடிகிறது.

இறுதியாக வடக்கு - கிழக்கின் மீள்கட்டமைப்பிற்கான ஆதாரங்களைத் திரட்டும் வகையில் நீங்கள் பரிந்துரைத்துள்ள புதிய கட்டமைப்பு சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளீர்கள். ஆனால் சக்தி வாய்ந்த சர்வதேச மற்றும் பிராந்திய சக்திகள் எங்கள் மீது தவறான அபிப்பிராயங்களைக் கொண்டுள்ள நிலையிலும் எங்கள் மக்களின் ஏகபிரதி நிதி ஒன்றுபட்டு அடைந்துள்ள எங்களது இருப்பை ஏற்க மறுத்துவரும் நிலையிலும் சர்வதேச அங்கீகாரம் அண்மைக் காலங்களில் கிடைக்கா நன்றே கருதுகின்றோம். எமது களுக்கும், எமது விடுதலை இயக்கத்தின் தலைவருக்கும் ஏற்பட்டுள்ள விரக்தியை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

வெளிநாட்டு தலைநகரங்களிலும் கிளிநொச்சியிலும் கடந்த 10 மாதங்களாக நடைபெற்ற நீண்ட அமர்வுகள் மற்றும் அறிக்கைகளுக்குப் பின்னர் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மற்றும் அகதிகளுக்கான மீள்கட்டமைப்பு அபிவிருத்தி உடனடி மனிதாபிமானத் தேவைகள் ஆகியவற்றோடு தொடர்புடைய ஒரேயொரு கட்டமைப்புத் தொடர்பாக உங்களது அரசாங்கம் இன்னும் முடிவு செய்ய வேண்டிய நிலையிலுள்ளது. நீங்கள் பரிந்துரைத்துள்ள புதிய கட்டமைப்பு மனிதாபிமான இலக்குகளை திறனோடும், விரைவாகவும் செய்து முடிக்கும் என்று எங்களை நம்ப வைக்க உங்களிற்கு இருக்கும் நிர்ப்பந்தத்தை எங்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை. எனினும் சிறிலங்காவின் ஊழல் நிறைந்த திறனற்ற அரசியல் தலையீடுகள் உள்ள நிர்வாகத்தின் வரலாற்றுப் பின்னணியில் உங்களது வாக்குறுதிகளையும், புதுமையான கட்டமைப்புக்களையும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஏற்கனவே உருவாக்கப்பட்ட நிர்வாக அமைப்புக்கள் தொடர்பாக எங்களுக்குக் கசப்பான, விரக்தியான அனுபவங்களே கிடைத்துள்ளன. ஏற்கனவே இருக்கும் கட்டமைப்பிற்குள் புதிய உயர் மட்ட நிர்வாகக் குழுவை உருவாக்கி எமது மக்களின் மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியும் என்பதை எமது மக்கள் நம்பிக்கை இழந்து, பொறுமை இழந்து வரும் நிலையில் எமது தலைமை தற்போதைய சூழ்நிலையை மீண்டும் தெளிவுப் படுத்த வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது.

கடந்த கால சமாதானப் பேச்சுவார்த்தைகள் நிரந்தரத்தீர்வை எட்டும் வகையில் தத்துவ ரீதியான மாதிரிகளையும் தீர்வுத் திட்டங்களை ஆராயும் பாதையில் சென்ற அதே வேளை சமாதானம் மற்றும் இயல்பான வாழ்க்கைக்கு ஏங்கிய இன்னலுக்கு உள்ளாக்கப்பட்ட எமது மக்களின் யதார்த்த நிலை உதாசீனப் படுத்தப்பட்டுள்ளது.

சகல அதிகாரங்களையும் கொண்ட சனாதிபதியோடு இணைந்து கூட்டு நிர்வாகம் நடாத்துவதில் உங்களது நிர்வாகம் சிக்கிப்போராடி வரும் நிலையில் சிறிலங்காவின் அரசியல் மற்றும் அரசியலமைப்புக்களை மாற்றியமைத்து நிரந்தரத்தீர்வை எட்டமுடியாதென்றே நாங்கள் கருதுகின்றோம். யதார்த்த நிலையை நீங்கள் மீள ஆலோசித்து மீள் ஆய்வு செய்து அடிப்படை மாற்றத்திற்கான கூறுகளை நிர்ணயிக்கவே நாங்கள் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தியிருக்கின்றோம். இந்தச் சூழ்நிலையிலேயே எங்களது தலைமை இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பு தொடர்பாக பரிந்துரைத்திருந்தது.

அரசியல் நிர்வாகச் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்ட போதிய சட்ட மற்றும் அதிகாரங்களைக் கொண்ட முடிவுகள் எடுப்பதிலும் தமிழர் தாயகத்தில் மக்களின் இயல்பு வாழ்வைத் தோற்றுவித்து போரினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீள்கட்டமைக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் விடுதலைப்புலிகள் பெரும்பங்கு ஆற்றும் இடைக்கால நிர்வாகத்தையே எமது தலைலை பரிந்துரைத்திருந்து. புதிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் பொறுப்பினை உங்களது அரசிற்கு அளித்திருந் தோம். சட்ட மற்றும் அரசியல்யாப்பு இடும் தடைகளைக் கடந்து புதிய நிர்வாகக் அமைப்பை உருவாக்கும் வழிமுறையை உங்களது அரசாங்கம் கண்டுபிடிக்கும் என்று நாங்கள் நம்பினோம். ஆனால் எங்களது பரிந்துரைக்கு தெளிவாகப் பதிலளிக்க நீங்கள் தவறியதோடு சிறிலங்காவின் சட்டத்திட்டங்களுக்கு எதிராக செயற்பட முடியாதென்று நீங்கள் தெரிவித்திருப்பது எமக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பங்கேற்பு விவாதத்திற்குட்பட்ட அபிவிருத்தி மற்றும் மீள்கட்டமைப்புச் செயற்பாடுகளை மட்டும் உள்ளடக்கிய புதிய அபிவிருத்திக்கான கட்டமைப்பை நீங்கள் பரிந்துரைத்துள்ளீர்கள். உங்களது பரிந்துரை எங்களுக்குத் திருப்தி அளிக்காதமையினால் அதனை நாங்கள் ஏற்கமுடியாது.

இறுதியாக எங்களது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்து எங்களது தலைமையின் பரிந்துரைக்கு ஏற்ப இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான வரைபை எங்களது பரிசீலனைக்கு வைத்தால் நாங்கள் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தயாராக இருக்கின்றோம். எங்களது பரிந்துரையை சாதகமான முறையில் பரிசீலிப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

### இரண்டு...

கொண்டனர். நெதர்லாந்து தூதுவரான திருமதி.சுசான் பிளாங்கற், பிரித்தானிய உயர்ஸ்தானியர் ஸ்ரீபன் இவான்ஸ் சுவிஸ் நாட்டுத் தூதுவர் பேனடினோ றொகாஷொனி ஆகிய மூன்று நாடுகளைச் சேர்ந்த தூதுவர்களும் பங்குபற்றினர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதானச் செயலக பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஐரோப்பிய நாட்டுத் தூதுவர்கள் கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்து பின்னர் அங்கிருந்து வாகனம் மூலம் கிளிநொச்சியை வந்தடைந்தனர். முகமாலையில் இருந்து கிளிநொச்சி வரையான இவர்களின் போக்குவரத்திற்குத் தமிழீழ காவல்துறையினர் வழித் துணை வழங்கினர்.

பேச்சுவார்த்தை முடிவடைந்த தும் நேற்று பிற்பகல் மீண்டும் இவர்கள் யாழ்ப்பாணம் சென்று விமானம் மூலம் கொழும்பிற்குச் சென்றுள்ளனர். (லோ)

### அரசியல்துறை...

துகொண்ட இச்சந்திப்பில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்கு மிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து ஏற்பட்டுள்ள இடைவெளியைக் குறைக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றி ஆராயப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (பா)

# டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்கேற்பு அவசியம்!

## கதிர்காமர் விருப்பம்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில விடுதலைப் புலிகள் கலந்துகொள்வது அவசியம் என சிறிலங்கா சனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோகரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தள்ளார்.

சமாதான பேச்சுவார்த்தையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று பொதுசன ஐக்கிய முன்னணி எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிகளுக்கும் ஜே.வி.பி.க்குமிடையிலான கூட்டு சமாதான நடவடிக்கைகளில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை லக்ஷ்மன் கதிர்காமர் அலரிமாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் இலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்து கருத்துக்கள் பரிமாறப் பட்டன. அத்துடன் டோக்கியோ மாநாடு குறித்தும் விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கை குறித்தும் லக்ஷ்மன் கதிர்காமருக்கு பிரதமர் விளக்கமளித்துள்ளார்.

### டோக்கியோ...

கிறார். உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் என்பன இலங்கையின் நிதித்துறை முன்னேற்றம் பற்றி அறிக்கைகளை சமர்ப்பிக்கும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஐக்கியநாடுகள் சபை என்பன வடக்குகிழக்கின் தேவைகள் குறித்து கூட்டறிக்கையை சமர்ப்பிக்க இருக்கின்றன. விடுதலைப் புலிகள் மாநாட்டில் கலந்து கொண்டாலோ கலந்து கொள்ளா விட்டாலோ இந்த நன்கொடைகளை சரியான விதத்தில் பயன்படுத்தும் விடயங்களில் அவர்களுக்குப் பாரிய பொறுப்பு இருக்கின்றது.

விடுதலைப்புலிகள் மாநாட்டில் பங்குபற்றுவதையே அனைவரும் விரும்புகிறார்கள் என்றும் அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளார்.

### இடைக்கால...

லாது தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்தவர்களும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டுமென சனாதிபதி குறிப்பிட்டார்.

# பிறப்புச் சான்றிதழ்கள் சில கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா கனகராயன் குளம் பகுதியில் சில பிறப்புச் சான்றிதழ்கள் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், சங்கானையைச் சேர்ந்த செல்வநாயகம் அகல்யா, செல்வநாயகம் குயின்கோசலிஜா, தம்பிப்பிள்ளை செல்வநாயகம் ஆகியோரது பிறப்புச் சான்றிதழ்களே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சான்றிதழ்களை ஏ-9 கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளவும். (பா)

# திருமலை சல்லிக் கிராமத்தில் வயோதிபர் சுட்டுக்கொலை

(திருமலை)

திருகோணமலையில் அறுபது வயது முதியோர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிவகுரு மயில்வாகனம் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

திருமலை நகரை அடுத்துள்ள கடலோரக்கிராமமான சல்லிக் கிராமத்தில் வைத்து நேற்றுமுன் தினம் இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே விபத்தொன்றில் தனது ஒற்றைக்காலை இழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு இவரது வீட்டிற்குச் சென்ற நபர் ஒருவர் இவரது பெயரைக் கூறிக் கூப்பிட்டபோது இவர் வெளியில் வந்தவேளை துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

# கிளி.வலய ஆசிரியர்களுக்கான ஐந்து நாள் செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஐந்து நாள் செயலமர்வு ஒன்று நடைபெற்று வருகின்றது. இதுவரை காலமும் புதிய கல்வி சீர்திருத்தத்திற்குட் படுத்தப்பட்ட பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கான இச்செயலமர்வு கடந்த 03 ஆம் திகதி முதல் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் கல்விவள நிலையத்தில் நடைபெற்று வருகின்றது. இச் செயலமர்வு எதிர்வரும் 07 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது.


## சாவு அறிவித்தல்

### குமாரவேலுப்பிள்ளை நமசிவாயம்

காரைநகர் கள்ளித்திடலைப் பிறப்பிடமாகவும் இல. 88 புதிய செட்டித்தெரு, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலுப்பிள்ளை நமசிவாயம் 04.06.2003 புதன்கிழமை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் தரப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இல. 88,
புதிய செட்டித்தெரு,
கொழும்பு-13.
தொ.பேசி: 01-452848.

தகவல் :
மனைவி, சரஸ்வதி,
பிள்ளைகள்.

(சி-7935)


நீட்டோம் மண்ணை காப்போம் மரத்தை

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.